
# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL Tamil Monthly தமிழ் மாத இதழ்

| | | | |
|---|---|---|---|
| மலர் : 8 | இதழ் :12 | செப்டம்பர் : 2024 | ரூ.20/- |
| Volume: 8 | Issue : 12 | September : 2024 | Rs.20/- |

# SHRI MAHA MERU MANDALI TRUST

**Reg. No.DIT (E) No.2 (651) 12-13/Sl.No.90/13-14**



# அஷ்டோத்ர ஸத சுக்ர வார ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயணம்

**104வது பாராயணம் - 02.08.2024 வெள்ளிக்கிழமை**
**ஸ்ரீ ஸர்வமங்கலாம்பிகா ஸமேத ஸ்ரீ தர்மலிங்கேஸ்வரர் திருக்கோவில்**
நங்கநல்லூர், சென்னை - 61.

**105வது பாராயணம் - 09.08.2024 வெள்ளிக்கிழமை**
**அருள்மிகு பொன்னியம்மன் திருக்கோவில்**
ஆலந்தூர், சென்னை - 116.

**106வது பாராயணம் - 16.08.2024 வெள்ளிக்கிழமை**
**ஸ்ரீ தேவி நாகாத்தம்மன் புற்றுக்கோவில்**
தனலட்சுமி தெரு, போஸ்டல் நகர், குரோம்பேட்டை, சென்னை.

**107வது பாராயணம் - 23.08.2024 வெள்ளிக்கிழமை**
**ஸ்ரீ கன்யகா பரமேஸ்வரி தேவஸ்தானம்**
சென்னை - 600 001.

**108வது பாராயணம் - 30.08.2024 வெள்ளிக்கிழமை**
**ஸ்ரீ அபித குஜலாம்பிகை சமேத ஸ்ரீ அருணாச்சலேஸ்வரர் திருக்கோவில்**
திருவண்ணாமலை 606 - 601.

தாங்கள் வீடுகளுக்கு அருகில் உள்ள ஆலயங்களில் வெள்ளிக்கிழமைகளில் மண்டலி சார்பாக ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் செய்திட அனுக வேண்டிய எண்.

**9443495950, 9444060346**

# வேதபாரதி
## செய்திகள்



**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** - மஹாகவி பாரதி

## அறிவோம் வேதம்

*இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.*

### வேதமந்திரம் - 62

**த$_1$ப$_1$ஸா ப்$_3$ரஹ்ம விஜிஜ்ஞாஸஸ்வ, த$_1$போ$_1$ப்$_3$ரஹ்மேதி$_1$|**

**தை$_1$த்$_1$தி$_1$ரீயோப$_1$நிஷத்$_1$**

**பொருள்:**

*தவத்தினால் ப்ரம்மத்தை அறிந்து கொள் தவம் தான் ப்ரம்மம்.*

*ஆத்ம ஞானம் அடைவதற்கு தவம் தான் முக்கிய ஸாதனம் தவத்தினால் தான் பரப்ரம்பத்தை அறிய முடியும் தவத்தில் புலனடக்கம் மனவடக்கம் ஸத்குரு ஸேவை எல்லாம் அடங்கியுள்ளன குருவின் உபதேசங்களைச் சிந்தனை செய்து உண்மைப் பொருளை அறிவதே தவம்.*

*//ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி://*

*//ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி://*

# வேதபாரதி செய்திகள்
**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 8 இதழ்: 12

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்

**ஆர்.வெங்கடராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 70101 88571

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

REGD No : TN/CC(S) / DN / 571 / 24-26

RNI No : 1282188

Title Code : TNTAM/2016/73726

R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**

(Tamil Monthly Magazine)

Published on : 1-7th (1st Week) Every Month

TN/PM G (CCR) / WPP 605/24-26 /
Valid from 01.01.2024 to 31.12.2026

புத்தக வடிவமைப்பு :
**ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்**
நெ.17, பாரதிதெரு, இந்திராநகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,
செ - 42. போன்: 9025864231


## புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| உங்கள் சிந்தனைக்கு | 5 |
| அட்டைப்பட விளக்கம் | 7 |
| புரட்டாசி மாத விசேஷங்கள் | 10 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 11 |
| ஸ்ரீமத் பாகவதம் | 13 |
| ஆதிசங்கரர் | 16 |
| மூதுரை (ஔவையார்) | 19 |
| மஹாபெரியவாளின் அற்புத விளக்கங்கள் | 22 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் | 23 |
| தர்மத்தின் குரல் | 24 |
| பூக்களோடு பேசுவோம் | 35 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 38 |
| இராமாயணம் தரும் படிப்பினை | 41 |
| சென்னை திருமயிலை ஸ்ரீகபாலீஸ்வரர் திருக்கோயில் | 44 |
| அயோத்தி குழந்தை ராமரின் அற்புத தரிசனம் | 48 |
| ஆசான் | 53 |



**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.200 |
| 10 வருட சந்தா | ரூ.1500 |

வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட
**VEDABHARATHI SEITHIGAL**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010246740**
**IFSC : CIUB 0000262**



நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.

**D. சூரியநாராயணன்**
**R. வெங்கட்ராமன்**
**K. சங்கர், S. ரகுநாத்**
**Cell : 94451 02193, 98402 01625**

Email:vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

# உங்கள் சிந்தனைக்கு....

## தற்பெருமை

இந்த பிரபஞ்சத்தில் நடக்கும் ஒவ்வொரு செயலும் கூட்டு முயற்சியில்தான் நடைபெறுகிறது. ஆனால் மனிதன் "எல்லாம் என்னால்தான் நடந்தது" என்று கூறுகிறான். எது செய்தாலும் அதில் எல்லாருடைய பங்கும் உள்ளது என்ற எண்ணம் உண்டாக வேண்டும். பகவான் தந்த வாழ்க்கை என்ற பரிசை, பாக்யத்தை நல்ல விதத்தில் மற்றவர்களுடைய மனம் புண்படாமல் உபயோகிக்க வேண்டும். எல்லோருக்கும் சகோதர மனோபாவம் ஏற்பட வேண்டும். உலகில் யாரும் உயர்ந்தவரும் இல்லை தாழ்ந்தவரும் இல்லை. அவரவர்களுக்கு உள்ள வேலையை அவரவர் செய்தால் போதும்.

ஒரு ஊரில் ஒரு சலவைக்காரன் இருந்தான். அவன் துணிகளைச் சுமக்க ஒரு கழுதையையும், வீட்டு காவலுக்கு ஒரு நாயையும் வளர்த்து வந்தான். ஒரு நாள் கழுதைக்கும் நாய்க்கும் ஒரு வாக்குவாதம் ஏற்பட்டது. இரண்டும் எஜமானனுக்கு நான்தான் முக்கியமானவன் என்று கழுதையும், இல்லை நான் தான் உண்மையான விசுவாசி என்று நாயும் சண்டை போட்டுக் கொண்டன. நாய் கழுதையிடம் "நம்மில் யார் எஜமானனுக்கு உண்மையான ஊழியன் என்பதை நிரூபிக்க இன்று ஒரு நாள் இரவு நீ வீட்டைப் பார்த்துக் கொள். நான் நாளை துணிகளை சுமக்கிறேன்" என்றது இதற்கு கழுதையும் ஒப்புக்கொண்டது.

அன்று இரவு வீட்டிற்கு ஒரு திருடன் வந்தான். இதைக் கண்ட கழுதை தன் எஜமானனை எழுப்புவதாக நினைத்து தன்னுடைய குரலில் கத்தியது. இதைக் கேட்ட சலவைக்காரன், கழுதை தன் தூக்கத்தைக்

கெடுத்துவிட்டது என்று எழுந்துவந்து கழுதையை நையப் புடைத்தான். பொழுதுவிடிந்து பார்த்தால் வீட்டில் எல்லாம் திருடு போயிருந்தது. இரவில் திருடன் வந்ததை நாய் உஷார்படுத்தவில்லை என்ற கோபத்தில் நாயையும் நையப் புடைத்துவிட்டான்.

இரண்டும் அதனதன் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தால் வீணாக அடி வாங்கியிருக்க வேண்டாம். இது போல்தான் சில மனிதர்களும்.

**D. சூரியநாராயணன்**

---

## BAJAN COMPETITION 2024

ஸ்ரீ ராதா கல்யாண மஹோற்சவ சேவா கமிட்டி நங்கநல்லூர் சார்பாக பள்ளி குழந்தைகளுக்கான பஜன் போட்டி 11.08.2024 அன்று நடைபெற்றது. பல பள்ளி குழந்தைகள் பங்குபெற்று பரிசினை வென்றார்கள். அவர்களுக்கு வித்வான் திரு.உமா சங்கர் மற்றும் வேதபாரதி திருமதி. Dr.ஷ்யாமா சுவாமிநாதன் ஆகியோர் பரிசுகளை வழங்கினார்கள். திருமதி. ஷ்யாமா சுவாமிநாதன் அவர்கள் வேதபாரதியின் செயல்பாடு மற்றும் பெண்களை போற்றிகாப்பது பற்றி விரிவாக பேசினார்கள்.



## அட்டைப்பட விளக்கம்
## "வாமன ஜயந்தி"

"நல்லவர்களைக் காப்பதற்கும், தீயவர்களை அழிப்பதற்கும் தர்மத்தை நிலைநாட்டவும் நான் யுகங்கள் தோறும் அவதரிப்பேன்"

இது பகவானின் கீதாசாரம். உலகில் அவர் எத்தனையோ அவதாரங்களை எடுத்திருக்கிறார். அதில் மிக முக்கியமானது 10 அவதாரங்கள். அதில் ஐந்தாவதாக வருவது **"வாமன அவதாரம்"**. இந்த அவதாரம் எடுக்க பகவானின் நோக்கம் என்ன?

பிரஹலாதனின் பேரனான **"மஹாபலி"** அசுரர் குலத்தில் பிறந்திருந்தாலும், நீதி நெறி தவறாது தர்மத்தை கடைபிடித்த ஒரு சிறந்த சக்ரவர்த்தியாக வாழ்ந்து வந்தான். சிறந்த விஷ்ணு பக்தன். இவனுக்கு அருள்புரியவே பகவான் மஹாவிஷ்ணு **"வாமன"** அவதாரம் எடுத்தார். புரட்டாசி மாதம், சுக்ல பட்க்ஷம், திருவோண (சிரவண) நட்சத்திரத்தில் முதல் அம்சமான அபிஜித் பாதத்தில் சூரியன் நடுப்பகலில் பிரகாசிக்கும் நேரத்தில் கச்யபருக்கும் அதிதிக்கும் புத்திரனாக அவதரித்தார். கிருஷ்ணாவதாரத்தில் பகவான் குழந்தையாக பிறந்து பிறகு சங்கு சக்ர கதா ரூபத்தில் தோன்றினார். ஆனால் வாமன அவதாரத்தில் பிறக்கும் போதே சங்கு சக்ர கதா ரூபத்தில் தோன்றி பிறகு உடனே ஒரு பிராமண சிறுவனாக மாறுகிறார். கச்யபரும், அதிதியும் மஹரிஷிகளை அழைத்து வைதீக கர்மாக்களைச் செய்து **"வாமனன்"** என்று பெயர் சூட்டினார்கள். மஹரிஷிகள் ஸ்ரீபகவானுக்கு 5வது வயதில் உபநயனம் செய்து வைத்தார்கள். (ஸ்ரீமத் பாகவதத்தில் 8வது ஸ்கந்தத்தில், 18-ம் அத்தியாயத்தில்

ஸ்லோகம் 14 முதல் 19 வரை இந்த உபநயனம் குறித்து விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

காயத்ரி மஹா மந்திரத்திற்கு தேவதையான ஸூர்ய பகவான் வாமனருக்கு காயத்ரி மந்திரத்தை உபதேசித்தார். பிருஹஸ்பதி ப்ரம்மஸூத்திரம் என்னும் பூணுலை கொடுக்கிறார். கஸ்யப்பிரஜாபதி முஞ்சிக்கயிற்றைவாமனரின் இடுப்பில் கட்டுகிறார். பூமாதேவி மான்தோலை போர்த்துகிறாள். மூலிகை களின் பதியான ‘‘சந்திரன்’’ பலா தண்டத்தைக் கொடுத்தார். தேவதை “குடையை” கொடுத்தார். வேத வித்துக்கள் எக்காரியத்தையும் செய்யும் முன் ஆசமனம் செய்ய வேண்டும். வேதத்தின் இருப்பிடமான ‘‘பிரம்மதேவன்’’ கமண்டலுவைக் கொடுத்தார். சப்தரிஷிகள் குசத்திலான (தர்ப்பை புல்) ஆசனத்தை கொடுத்தார்கள். ருத்ராக்ஷ மாலையை சரஸ்வதி தேவி நேரில் அளிக்கிறார். பிக்ஷை வாங்குவதற்காக பிக்ஷா பாத்திரத்தை ‘‘குபேரன்’’ கொடுக்கிறான். ஸர்வேஸ்வரனான பரமசிவனின் பத்தினியான அந்த லோகமாதாவான அன்னபூர்ணியே நேரில் வந்து வாமனருக்கு பிக்ஷை இடுகிறாள். அதன் பிறகு வாமனன் தனது வைதீக கர்மாக்களைத் தவறாது செய்துவந்தான்.

தன் பெற்றோர்களின் அனுமதியோடு நர்மதை நதிக்கரையில் யாகம் செய்து கொண்டிருந்த பலிச்சக்ரவர்த்தியின் யாகசாலையை அடைந்து மூன்று அடி நிலம் கேட்கிறார். மூன்றாவது அடிக்கு இடம் இல்லை என்றதும் பலிச்சக்ரவர்த்தி பகவான் முன் குனிந்து நின்றதும் பகவான் தன்னுடைய பாதத்தை மஹாபலியின் சிரஸில் வைத்து அழுத்தி பாதாள

*லோகத்திற்கு அனுப்பியதாக புராணங்கள் கூறுகின்றன. ஆனால் ஸ்ரீமத் பாகவதத்திலோ அல்லது ஸ்ரீமன் நாராயணீயத்திலோ பகவான் தன்னுடைய காலை மஹாபலியின் சிரசில் வைத்து அழுத்தியதாக கூறப்படவில்லை.*

*மஹாபலி தன் சிரசைக் காண்பித்து* **"ஹே பகவான் மூன்றாம் அடிக்கு என் சிரசின் மீது தங்கள் காலடியை வைக்கலாம், அதனால் ஏற்படும் எல்லா விளைவுகளையும் நான் ஏற்றுக் கொள்ள சித்தமாக இருக்கிறேன்''** *என்று கூறி பகவானிடம் சரணடைகிறான். இதைக் கேட்ட பகவான் அங்கு கூடியிருந்தவர்களிடம்* **"என்னை சரணடைந்தவர்களை நான் ஒரு போதும் கைவிடமாட்டேன். தான் செய்யப்போகும் தான தர்மத்தால் தனக்குப் பதவிபோகும், பல துன்பங்கள் வரும் என்று அவனுடைய குலகுரு சுக்கிராச்சார்யர் சொல்லியும் மஹாபலி தன் உறுதியை கைவிடவில்லை. தேவர்களும், முனிவர்களும் அடைய முடியாத சிரேயஸ்ஸை மஹாபலி அடைந்துவிட்டான்"** *என்று கூறி அவனை ஆட்கொண்டார்.*

*இந்த வருடம்* **"வாமன ஜயந்தி 15.09.2024, ஞாயிற்றுக்கிழமை''** *நிகழ்கிறது. அன்றைய தினம் வாமனர் படத்திற்கு பூஜை செய்து ஸ்ரீமத் பாகவதத்தில் 8வது ஸ்கந்தத்தில் 18-ம் அத்தியாயத்தில் உள்ள வாமன அவதாரத்தை பக்தி சிரத்தையுடன் பாராயணம் செய்பவர்கள் நிச்சயம் பகவானுடைய அனுக்கிரஹத்திற்கு பாத்திரமாவார்கள்.*

**D. சூரியநாராயணன்**

## குரோதி வருஷம் - புரட்டாசி மாத விசேஷங்கள்

**(செப்டம்பர் 17.09.2024 முதல் அக்டோபர் 17.10.2024 வரை)**

| | | | |
|---|---|---|---|
| 18.09.2024 | புர 2 | புதன் | பௌர்ணமி, மஹாளய பக்ஷாரம்பம் |
| 21.09.2024 | புர 5 | சனி | சங்கடஹர சதுர்த்தி |
| 22.09.2024 | புர 6 | ஞாயிறு | கார்த்திகை விரதம் |
| 23.09.2024 | புர 7 | திங்கள் | ஷஷ்டி |
| 28.09.2024 | புர 12 | சனி | ஏகாதசி |
| 30.09.2024 | புர 14 | திங்கள் | ப்ரதோஷம் |
| 02.10.2024 | புர 16 | புதன் | ஸர்வ மஹாளய அமாவாஸை |
| 03.10.2024 | பு 17 | வியாழன் | நவராத்திரி பூஜை ஆரம்பம் |
| 07.10.2024 | புர 21 | திங்கள் | சதுர்த்தி, அனுஷம் |
| 09.10.2024 | புர 23 | புதன் | ஷஷ்டி |
| 11.10.2024 | புர 25 | வெள்ளி | ஸரஸ்வதி பூஜை, ஆயுத பூஜை |
| 12.10.2024 | புர 26 | சனி | விஜயதசமி |
| 13.10.2024 | புர 27 | ஞாயிறு | ஏகாதசி |
| 15.10.2024 | புர 29 | செவ்வாய் | ப்ரதோஷம் |
| 17.10.2024 | புர 31 | வியாழன் | பௌர்ணமி |

### 02.10.2024 புதன்கிழமை - அமாவாஸை

குரோதி நாம ஸம்வத்ஸரே, தக்ஷிணாயனே வர்ஷ ருதௌ, கன்யாமாஸே, க்ருஷ்ணபக்ஷே, அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ வாஸர : வாஸரஸ்து ஸௌம்ய வாஸர யுக்தாயாம் உத்திரபல்குனி நக்ஷத்ர யுக்தாயாம், விஷ்ணு யோக விஷ்ணு கரண ஏவம் குண ஸகல விஸேஷண விஸிஷ்டாயாம், அஸ்யாம், அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ.

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

D. சூரியநாராயணன் பகுதி - 64

**கீதாயா : புஸ்தகம் யத்ர யத்ர பாட: ப்ரவர்ததே/**
**தத்ர ஸர்வாணி : தீர்த்தானி ப்ரயாகாதீனி தத்ர வை//**

**பொருள் :** கீதை புஸ்தகம் எங்கு இருக்கிறதோ, எங்கு கீதை பாடம் நடைபெறுகிறதோ அங்குப் புண்ணிய தீர்த்தங்களனைத்தும், பிரயாகைகளும் மற்றும் உள்ளவைகளும் வந்து கூடுகின்றன.

## அத்தியாயம் – 3
## கர்ம யோகம்

சாதன திசையில் இருப்பவன் செய்ய வேண்டியது என்ன என்ன என்பதை அடுத்துவரும் ஸ்லோகங்கள் – 19 முதல் 28 வரை விளக்குகிறது. அவை என்ன என்பதை பார்ப்போம்.

**தஸ்மாத$_3$ஸக்த: ஸததம் கார்யம் கர்ம ஸமாசர/**
**அஸக்தோ ஹ்யாசரன் கர்ம பரமாப்னோதி பூருஷ://**
**(கீதை 3-19)**

**பொருள் :** ஆகவே, பற்றின்றி எப்பொழுதும் ஆற்றவேண்டிய கடமையைச் செவ்வனே நிறைவேற்றிக் கொண்டிரு. ஏனெனில், பற்றின்றிக் கர்மங்களைச் செய்கின்ற மனிதன் பரமாத்மாவை அடைகிறான்.

**விளக்கம் : "நான் தான் எல்லாம் செய்கிறேன்"** என்ற எண்ணத்தை **விட்டு "நானும் இதில் ஒரு பாகம்"** என்று நினைத்து செய்தால் நாம் "அஸகத: அதாவது பற்றற்றவனாக ஆகிறோம். அப்படி பற்றற்று கர்மம் செய்தால் அவனுக்கு பரம சந்தோஷம் கிடைக்கும். அதாவது நான் செய்த செயல் வெற்றி

அடையாவிட்டாலும், "நான் என்னுடைய பங்கை சரியாக செய்யவில்லை, இனி என்னை செம்மை (இம்ரூ) படுத்திக்கொள்ள வேண்டும்" என்று நினைக்க வேண்டும்.

அல்லது அந்த செயல் அனுகூலமாக அமைந்தால் அது நம் எல்லோருடைய ஒற்றுமையால் நிகழ்ந்தது என்று அந்த சந்தோஷத்தை எல்லோருடனும் பங்குவைத்துக் கொள்ள வேண்டும். அதாவது அனுகூலமானதை மற்றவர்களுடன் பகிர்ந்துக்கொண்டும், பிரதிகூலமானதை ஏற்றுக்கொண்டும் இனி செம்மை படுத்திக்கொள்வேன் என்ற ஒரு பிரதிக்ஞையும், கிடைத்த சந்தர்ப்பத்தை சரியாக பிரயோஜனப் படுத்திக்கொண்டு தன்னுடைய கடமையை மற்றவர்களுடைய உதவியுடனோ அல்லது தானே சரியாக செய்தால் அவன்தான் **"கர்மயோகி"** எனப்படுவான்.

ராமாயணத்தில் ஹனுமான் ஸ்வாமி சீதையை காண இலங்கைக்குச் சென்றபோது அனேக துன்பங்களையும், கஷ்டங்களையும் எதிர்கொண்டார். கடைசியில் சீதையைக் கண்டு ராமர் கொடுத்த கணையாழியை கொடுத்துவிட்டு வந்து ஸ்ரீராமர் எனக்கு கொடுத்த கடமையை சந்தோஷப்பட வேண்டும் என்று நினைத்து ஸ்ரீராமனிடம் **"கண்டேன் சீதையை"** என்றுதான் கூறினார். அவர் பட்ட கஷ்டங்களை ஸ்ரீராமரிடம் கூறவில்லை. இதுதான் **"கர்மயோகம்".**

அடுத்துவரும் ஸ்லோகங்கள் 20 முதல் 29 வரையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு **"லோக ஸங்க்ரம்"** (உலக நலனுக்காக செயலாற்றுதல்) என்பதைப் பற்றி உபதேசிக்கிறார்.

தொடரும்.....

# ஸ்ரீமத் பாகவதம்

*(ஸத்யம் பரம் தீமஹி)*

பரிதி பகுதி - 44

## ஸ்கந்தம் 4

### "ப்ருது" சக்கரவர்த்தியின் சரித்திரம்

### (ஸ்கந்தம் 4 – அத்தியாயங்கள் 17 முதல் 23 வரை)

**"ப்ருது"** *சக்ரவர்த்தி தர்ம காரியங்களில் ஈடுபட்டு சாஸ்திர முறைப்படி கர்மாக்களை செய்துவந்தான். அதனால் அவனை மக்கள்* **"ராஜரிஷி"** *என்று கொண்டாடினார்கள்.*

*இவ்வாறு இருந்துவரும் போது* **"பிருது''** *அஸ்வமேத யாகம் செய்ய விரும்பினான். அதற்காக அவன் தேர்ந்தெடுத்த இடம் ஸரஸ்வதி நதி கிழக்கு நோக்கி பாயும்* **"ப்ரம்மவர்த்தம்''** *என்ற புனித இடம். அந்த இடத்தில் நூறு அஸ்வமேத யாகங்கள் செய்வதாக சங்கல்பம் செய்துகொண்டான்.*

*நூறு அஸ்வமேத யாகங்கள் செய்பவர் இந்திர பதவியை அடையலாம். பிருது இந்திர பதவியை எண்ணி இந்த யாகம் செய்ய ஆரம்பிக்கவில்லை. ஆனால் இதைக் கேள்விபட்ட இந்திரன் பிருது மீது கோபம் கொண்டான். காரணம் பிருது நூறு அஸ்வமேத யாகங்கள் செய்துவிட்டால் அவன் இந்திரன் ஆகிவிடுவான் அப்போது தன்னுடைய இந்திர பதவி போய்விடுமே என்றபயம்.*

*இந்த யாகத்திற்கு யக்ஞ நாராயணனான பகவான் ஸ்ரீ ஹரி நேரிடையாக தரிசனம் தந்தார். அவருடன் ப்ரும்மாவும், அனைத்து தேவர்களும், கந்தவர்களும், முனிவர்களும், அப்சரஸ்களும் வந்திருந்தார்கள்.*

இதைக் கண்ட இந்திரன் அந்த யாகத்திற்கு இடையூறு செய்ய முற்பட்டான். பிருது தொண்ணூற்று ஒன்பதாவது அஸ்வமேத யாகத்தை முடித்ததும் இந்திரன் மாறுவேடத்தில் வந்து அஸ்வத்தை (குதிரையை) கவர்ந்து வான் வழி சென்றுவிட்டான். இதைக் கண்ட **"அத்ரி"** முனிவர் பிருதுவின் மகனிடம் இந்திரன் மீது பாணம் எய்யும்படி கூறினார். இதைக்கண்ட இந்திரன் குதிரையை விட்டுவிட்டு மறைந்துவிட்டான். ஆனால் இந்திரன் மீண்டும் மீண்டும் மாறுவேடங்களில் வந்து குதிரையை அபகரித்துச் சென்றான். ஒவ்வொரு முறையும் ப்ருதுவின் மகன், சீதையைக் கவர்ந்து சென்ற ராவணனை ஜடாயு துரத்தியதுபோல் மறுபடியும் மறுபடியும் இந்திரனை தொடர்ந்து சென்று குதிரையை மீட்டுவருவான்.

இதைக்கண்ட, யாகத்தில் ஈடுபட்டிருந்த ரித்விக்குகள் ப்ருதுவிடம் "அரசே தங்கள் பகைவன் இந்திரன் பொறாமையால் ஒளியிழந்து போனான். அவனை மந்திரக்கட்டு போட்டு இங்கு இழுத்துவந்து ஹோமத்தில் ஆவாஹனம் செய்துவிடுவோம்'' என்றார்கள்.

அப்போது அங்கு எழுந்தருளிய பகவான் ப்ரும்மதேவர் "ரித்விக்குகளே! நீங்கள் செய்வது தவறு. இந்திரன் பகவான் யக்ஞ நாராயணனின் அம்சம். அவனைக் கொல்ல உங்களால் முடியாது. இந்திரன் நூறு அஸ்வமேத யாகங்கள் செய்ததால் அவனுக்கு **"சதக்ரது"** என்று பெயர் உண்டு. பிருது தொண்ணூற்றொன்பது அஸ்வமேத யாகங்கள் செய்ததால் அவருக்கு **"ஏகோன சதக்ருது"** (நூறுக்கு ஒன்று குறைவு) என்று புகழப்பட்டு இந்திரனுக்கு மேலான சிரேயஸ்ஸை அடைவான்.

ஆகையால் இந்த யாகத்தை இத்தோடு விட்டுவிடுங்கள்” என்றார்.

ப்ருஹ்மாவின் வார்த்தைகளைக் கேட்ட ப்ருது சமாதானம் அடைந்து அவரை நமஸ்கரித்து வேள்வியை நிறுத்தினான். இந்திரனும் ப்ருதுவிடம் மன்னிப்பு வேண்டினான். இருவரும் ஆலிங்கனம் செய்து கொண்டார்கள். பகவான் அவர்களை ஆசீர்வதித்துவிட்டு மறைந்துவிட்டார்.

ப்ருது சக்ரவர்த்தி தன் வாழ்க்கையை பகவத் அர்ப்பணமாகவே வாழ்ந்து, முக்தி நெறிக்கான முயற்சியை மேற்கொள்ள எண்ணி தன் மகனிடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு மனைவியுடன் காட்டிற்குச் சென்று கடும் தவம் இருந்து தன் மனைவியுடன் வைகுந்தம் சேர்ந்தான்.

ப்ருது சக்ரவர்த்தியின் கதை இத்தோடு முடிவடைந்தது.

ஸ்ரீமத் பாகவதம் தொடரும்...

## அறிவிப்பு

உங்கள் வாழ்த்துக்களுடன் அடுத்த மாதம் வேதபாரதி செய்திகள் 11-ம் ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது. உங்கள் பேராதரவை தொடர்ந்து நல்கிட வேண்டுகிறோம். சிறப்பு பக்கங்களுடன், புதிய கட்டுரைகளுடன், புதிய பொலிவுடன் வரவுள்ளது. 10 ஆண்டு காலம் ஒத்துழைப்பு கொடுத்த நல் உள்ளங்களுக்கு மனமார்ந்த நன்றி.

**வேதபாரதி புத்தகக்குழு**

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042. Editor : **R. VENKATARAMAN, 9443495950**

அத்வைத ஆசான்

# ஸ்ரீ ஆதிசங்கரர்

**ஆதவன்** **அத்தியாயம் — 13** **பகுதி 34**

## அத்தியாயம் 2
## (தெற்கு நோக்கி பயணம்)

ஸுரேச்வரருக்கு உபதேசம் அளித்த பின் ஸ்ரீசங்கரர் தன் சிஷ்யர்களுடன் தென்னாட்டை நோக்கி நடந்து நர்மதை நதியைக் கடந்து காசியை வந்தடைந்து அங்கு சிலகாலம் இருக்க தீர்மானித்தார்.

ஒரு நாள் ஸ்ரீ சங்கரர் கங்கையில் குளித்துவிட்டு வரும்போது ஒரு மரத்தடியில் ஒருவர் தியானம் செய்துகொண்டிருந்ததை பார்த்தார். அவரிடம் சென்ற ஸ்ரீசங்கரர் "என்னைத் தெரிகிறதா?" என்று கேட்டார். தியானம் செய்துகொண்டிருந்தவருக்கு ஒன்றும் புரியவில்லை. ஸ்ரீ சங்கரர் அவரிடம் "பால்யத்தில் எனக்கு சகாவாக இருந்த விஷ்ணுசர்மா தானே நீ" என்றார். இதைக் கேட்டதும் விஷ்ணுசர்மா கண்களில் நீர் மல்க ஸ்ரீசங்கரரை விழுந்து நமஸ்கரித்தார். ஸ்ரீ சங்கரர் அவரை ஆசீர்வதித்து அவருக்கு **"சித்சுகாச்சார்யர்"** என்று பெயர் சூட்டி அவரையும் தன் சிஷ்யராக ஏற்றுக்கொள்கிறார்.

காசியில் இருந்த ஸ்ரீசங்கரர் சில காலத்திற்கு பிறகு தன் சிஷ்யர்களுடன் நடந்தே ஸ்ரீசைலத்தை சென்றடைந்தார். ஸ்ரீசைலம் கிருஷ்ணா நதியும், துங்கபத்ரா நதியும் ஸங்கமமாகும் இடத்தில் இருக்கிறது. யானை, சிங்கம், புலி போன்ற மிருகங்கள் இஷ்டம்போல் நடமாடும் பயங்கரமான வனப்பிரதேசம்.

இங்குள்ள மலையுச்சியில்தான் சிவபெருமானுக்கு அர்ப்பணிக்கப்பட்ட 12 ஜோதிர்லிங்க கோவில்களில் ஒன்றான ஸ்ரீ பிரமராம்பா மல்லிகார்ஜுன கோயில் அமைந்துள்ளது. அர்ஜுனன் தவம் செய்த இடம். இங்குதான் சிவன் அர்ஜுனனுக்கு வேட்டைக்காரனாக தரிசனம் அளித்து பாசுபதாஸ்திரத்தையும் அளித்தார். இங்குள்ள ஈஸ்வரனுக்கு மல்லிகை மலர்களால் அர்ச்சனை செய்ததால் இந்த இடம் **“மல்லிகார்ஜுனம்”** என்ற பெயர் பெற்றது.

ஒரு நாள் ஸ்ரீசங்கரர் மல்லிகார்ஜுன மூர்த்தியை தரிசித்து, லிங்கார்ச்சனை செய்துவிட்டு ஒரு கல்லாலின் (மரத்தின் கீழ்பாகத்தில் உருவாகியிருக்கும் பொந்து போன்ற பகுதி) உள்ளே தங்கி எந்த வெளிநாட்டமும் இல்லாமல் யோக நிலையில் இருக்க ஆரம்பித்தார். இந்த ஏகாந்த வாஸகாலத்தில்தான் ஸ்ரீசங்கரர் பக்தி ரஸம் ததும்பும் 100 ஸ்லோகங்களைக் கொண்ட **“சிவானந்தலஹரி”** யை இயற்றினார்.

இந்த **“சிவானந்த லஹரியில்’’** 50ஆவது ஸ்லோகத்தில் ஸ்ரீசங்கரர் மல்லிகார்ஜுன க்ஷேத்திரத்தை அழகாக பெயரிட்டு குறிப்பிடுகிறார்.

**ஸந்த்யாரம்பவிஜ்ரும்பிதம் ஸ்ருதிஸிர:ஸ்தானாந்தராதிஷ்டிதம்**
**ஸ்ப்ரேமப்ரமராபிராமமஸக்ருத் ஸத்வாஸனாஸோபிதம்/**
**போகீந்த்ராபரணம் ஸமஸ்தஸுமன:பூஜ்யம் குணாவிஷ்க்ருதம்**
**ஸேவே ஸ்ரீகிரி மல்லிகார்ஜுந மஹாலிங்கம் சிவாலிங்கிதம்//**

**(ஸ்லோகம் – 50)**

**பொருள் :** ஸந்த்யாகால ஆரம்பத்தில் நடனமாடுவதில் விருப்பமுள்ளவரும் வேதத்தின் முடிவிலுள்ள உபநிஷதங்களில் நிலையாயிருப்பவரும், ப்ரேமை மிகுந்த ப்ரமராம்பிகையின் அருகாமையால்

அழகியவரும், எப்போதும் பக்திமான்களின் பக்திமணம் கமழ்பவரும், நல்ல குணங்களால் கீர்த்திபெற்றவரும், பார்வதி தேவியாகிய பராசக்தியால் அணைக்கப் பெற்றவரும் ஆன ஸ்ரீ சைலம் என்னும் மலைமேலமர்ந்த ஸ்ரீமல்லிகார்ஜுன மஹாலிங்கத்தை நமஸ்கரிக்கிறேன்.

ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதர் அருளிச் செய்த ஸ்தோத்திரங்களில் **"சிவானந்தலஹரி', "ஸௌந்தர்ய லஹரி'** என்ற இரண்டும் நமக்குக் கிடைத்தற்கரிய பெரும் பொக்கிஷங்களாகும்.

அம்பாளைப் பற்றியது **"ஸௌந்தர்ய லஹரி"** – ஈஸ்வரனைப் பற்றியது **"சிவானந்த லஹரி", "லஹரி"** என்றால் பிரவாஹம், பெரிய அலை என்று பொருள்.

பொதுவாக நூறு செய்யுள்கள் கொண்ட துதிகளை **"சதகம்"** என்றுதான் அழைப்பார்கள். (உம்) **"மயூர சதகம்" "பஞ்ச சதகம்".** ஆனால் ஸ்ரீ சங்கரர் ஏன் **"லஹரி"** என்று அழைக்கிறார் என்பதற்கு நம்முடைய ஸ்ரீ மஹாபெரியவா **"தெய்வத்தின் குரல்"** ஆறாவது பகுதியில் அழகான நீண்ட விளக்கத்தை அளித்துள்ளார்.

இந்த **"சிவானந்த லஹரி"** ஸ்லோகங்களைப் படித்தால் கண்களில் நீர்மல்கும். குறிப்பாக 79ஆவது ஸ்லோகம். இந்த ஸ்லோகங்களை தினமும் பாராயணம் செய்தால் இம்மைக்கும், மறுமைக்கும் அவை பயன்கொடுக்கும் கவசங்களாக அமையும்.

தொடரும்...

**மஹாளய பக்ஷ சிறப்பு நாட்கள்**

ஒரு நாள் மட்டும் மஹாளயம் செய்பவர்கள்

1. மஹா பரணி - 21.09.2024 சனிக்கிழமை
2. மஹாவ்யதீபாதம் - 24.09.2024 செவ்வாய்கிழமை
3. மத்யாஷ்டமி - 25.09.2024 புதன்கிழமை
4. கஜச்சாய - 30.09.2024 திங்கட்கிழமை

இதில் ஏதேனும் ஒரு நாளில் மஹாளயம் செய்யலாம்.

# ஔவையார்
# "மூதுரை"

*"**மூதுரை**" = முதுமை + உரை = மூதுரை பழமையான அறக்கருத்துக்களைக் கொண்டிருப்பதால் 'மூதுரை" என்று அழைக்கப்படுகிறது. இந்நூலில் மொத்தம் 30 வெண்பா பாடல்கள் அமைந்துள்ளன.*

## வெண்பா 24

**நற்றாமரைக் கயத்தில் நல் அன்னம் சேர்ந்தார் போல்**
**கற்றாரைக் கற்றாரே காமுறுவர் – கற்பிலா**
**மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்**
**காக்கை உகக்கும் பிணம்.**

**பொருள் :** குளத்தில் பூத்திருக்கும் தாமரையை அன்னப்பறவை சேர்ந்தது போல் கற்றவர்களைக் கற்றவர்களே விரும்பி சேர்வர். சுடுகாட்டில் பிணத்தைக் காக்கைச் சேர்வது போல, கல்வி அறிவில்லாத மூடரை மூடர்களே சேர்வர்.

**விளக்கம் :** ஔவையார் இந்த பாடலில் அன்னப்பறவை மற்றும் காக்கை ஆகியவற்றைகற்றவர்கள் மற்றும் கசடர்கள் ஆகியோருடன் ஒப்பிட்டு பாடியுள்ளார். பாடலின் முதல் வரியில் **"நற்றாமரைக் கயத்தில்"** என்கிறார். **"கயம்"** என்றால் **"குளம்"** என்று பொருள். **"நல் அன்னம்"** = நல்ல அன்னப்பறவைகள் நல்ல தாமரை மலர்கள் உள்ள குளத்திற்குத்தான் விரும்பி செல்லுமாம். அதாவது கற்றவர்கள் மற்றகற்றவர்களுடைய நட்பைத்தான் விரும்புவார்கள் என்கிறார். இதற்குதான் நல்ல அன்னப் பறவையையும் நல்ல குளத்தையும் உதாரணமாக கூறுகிறார்.

அடுத்து **'கற்பிலா மூர்கர்"** என்கிறார். அதாவது சிறிதும் அறிவில்லாத முட்டாள்கள். இவர்கள் ஒரு நாளும் அறிவுடையவர்களுடன் நட்பாக இருக்கமாட்டார்கள். அவர்கள் தங்களைப்போல் அறிவில்லாத மூடர்களின் நட்பைத்தான்

விரும்புவார்கள். இதற்கு ஔவையார் கூறும் உதாரணம் முதுகாட்டில், அதாவது இடுகாட்டில் உள்ள பிணத்தை காக்கைத்தான் விரும்பி போய் கொத்தி சாப்பிடும். அன்னப்பறவை ஒரு போதும் பிணத்தை விரும்பி சாப்பிடாது.

இதிலிருந்து நாம் அறியவேண்டியது. நம்முடைய அறிவு உயர்ந்தால்தான் அறிவுடையவர்களின் நட்பை நாம் பெறமுடியும்.

தொகுப்பு : **பரிதி**


## கோடீ காயத்ரீ ஜப யக்ஞம் 2024 – ஓசூர்

கோடீ காயத்ரீ ஜப யக்ஞம் – ஓசூரில் 30.06.2024, ஞாயிறு அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. 29.06.2024 அன்று காலை வேதபாரதி குருஜி ஸ்ரீமான் கைலாஸ கனபாடிகள் மற்றும் ஸ்ரீமான் ராஜாகுருஜி வந்து ஸ்ரீ பாபு சர்மா இல்லத்தில் தங்கி ஏற்பாடுகளுக்கு உதவினார்கள். பொறுப்பாளர்கள் ஸ்ரீ வெங்கட்ராமன், ஸ்ரீ ராமகிருஷ்ணன், ஸ்ரீ ரகுநாத் மாமா, ஸ்ரீ சங்கர், ஸ்ரீ வைத்யநாதன், ஸ்ரீ பாபு சர்மா ஆகியோர் திரவியங்கள் தயார் செய்தல், சானம் தெளித்தல், சுத்தம் செய்தல் போன்ற பணிகள் செய்து யாகசாலை தயார் செய்தார்கள். யாகம் நடக்க இருந்த ஸ்ரீ வேணுகோபால சுவாமி கோவில் நிர்வாகிகளும் மிகுந்த ஒத்துழைப்பு நல்கினார்கள்.

30.06.2024 அன்று காலை 5.00 மணி முதல் கணபதி ஹோமம் ஆரம்பிக்கப்பட்டது. 8.00 மணி முதல் ஸ்ரீ காயத்ரீ ஹோமமும், ஸ்ரீ காயத்ரீ ஜபமும் ஆரம்பிக்கப்பட்டது. 5 ஹோம குண்டத்தில் முதலில் வந்தவர்கள் அடிப்படையில் ஜபம் அதிகம் செய்தவர்கள் உட்கார வைக்கப்பட்டு மற்றவர்கள் ஜபம் செய்தோம். ஹோமம் நிறைவடைந்த உடன் குகை கோவில் ஸ்ரீ சுவாமிகள் ஸ்ரீ சங்கர சாக்தானந்த சரஸ்வதி சுவாமிகள், பத்ரகாசி ஆசிரமம் வந்திருந்து அருளாசி வழங்கினார்கள். எல்லோருக்கும் காலை கஞ்சியும் மதியம் ஆசாரமான ப்ரசாதமும் வழங்கப்பட்டது.


Rs.1000 inclusive of tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Contact
9952972436 / 7824807801
Shri Meera Labs Pvt Ltd
WOPPER

# மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்



## ஹிந்து மதம்

ஹிந்து மதஸ்தர்கள் ரொம்பவும் பெருமைப்பட வேண்டிய அம்சம், இந்த மதம் ஒன்றுதான் தன்னை அநுசரிப்பதன் மூலமே ஒரு ஜீவன் உய்வு பெறமுடியும் என்று ஒரு தனி உரிமை கொண்டாடிக் கொள்ளாமலிருப்பதேயாகும். யார் யார் எந்தெந்த சமய மார்க்கத்தில் போனாலும் கடைசியில் ஒரே பரமாத்மாவிடம் வந்து சேருவார்கள் என்பதை ஒப்புக் கொள்ளுகிற விசால மனப்பான்மை நம் சாஸ்திரங்களிலேயே காணப்படுகிறது. இதனால்தான் பிறரை ஹிந்துவாக மத மாற்றம் செய்ய நம் சாஸ்திரங்கள் இடம் கொடுக்கவில்லை.

இயேசு கிறிஸ்துவின் உபதேசங்களைப் பின்பற்றாதவர்களெல்லாம் நரகத்துக்குத்தான் போவார்கள்; முகம்மது நபியின் உபதேசத்தை அநுசரிக்காதவர்களுக்கு கதிமோக்ஷம் கிடையாது என்றெல்லாம்தான் அந்தந்த மதஸ்தர்கள் சொல்கிறார்கள். அவர்களிடம் நாம் கோபப்படக்கூடாது. அவர்கள் வாஸ்தவமாகவே அப்படி நினைக்கலாம். அந்தந்த மதத்தில் இருப்பதால் தங்களுக்குக் கிடைத்திருக்கிற நிறைவைப் பார்த்து, மற்றவர்களுக்கு இத்தனை நிறைவு இருக்க முடியாது என்று நினைத்து, நல்லெண்ணத்தின் பேரிலேயே மற்றவர்களையும் தங்கள் வழிக்கு மாற்ற ஆசைப்படுகிறார்கள் என்றே வைத்துக் கொள்ளலாம். வெளிப்பார்வைக்குக் கெடுதலாகத் தோன்றுகிற வழிகளைக் கடைப்பிடித்தாவது ஒரு நல்ல லக்ஷியத்தைச் சாதிக்கலாம் என்று நினைத்தே அவர்கள் பலவிதமான முறைகளைக் கையாண்டு மற்றவர்களைத் தங்கள் மதத்துக்கு இழுக்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளலாம்.

தொடரும்...

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை



## கர்ம யோகம் — 2


சென்றமாத தொடர்ச்சி...

மறுநாள் பரீட்சையில், முதல் மாணவன், கஷ்டமான ஒரு கேள்வியைப் பார்த்ததும் திகைத்துப் போனான். கர்மயோகியானவன் அதே கேள்வியை நிதானமாகப் படித்துப் பார்த்துவிட்டு சற்றும் மனம் கலங்காமல் தனக்குத் தெரிந்த அளவிற்குப் பதிலை எழுதினான். கர்மயோகியைக் காட்டிலும் முதல் மாணவன் குறைவாக மதிப்பெண்களைப் பெற்றதில் வியப்பேதுமில்லை. பலன்களை எதிர்பார்த்து காரியம் செய்பவனைவிட, கர்மயோகத்தைப் பழகுபவனின் திறமை மிக அதிகமாக இருக்கும் என்பதே இவ்வுதாரணம் நமக்குப் புகட்டும் பாடமாகும்.

உனக்கு வகுக்கப்பட்ட கடமைகளைச் செய், ஏனெனில், செயலற்று இருப்பதைக் காட்டிலும் செயலாற்றுவதே சாலச்சிறந்தது. தவிரவும், செயலேதும் புரியாமல் நீ சும்மா இருந்தால், உன் உடலைப் பேணிக் காத்துக்கொள்வதும் உனக்கு இயலாமல் போய்விடும். இறைவனுக்கென்று அர்ப்பணித்துச் செய்த செயல்களைத் தவிர மற்ற செயல்கள் யாவும் ஒருவனை பந்தப்படுத்தி விடுகின்றன. ஓ, குந்தியின் மைந்தனே! பற்றை ஒழித்து இறைவனுக்காகக் காரியங்களைச் செய்யப் பழகு... பற்றில்லாமல் தன் கடமைகளைச் செய்யும் ஒருவன், (மனத் தூய்மையின் மூலம்) மோக்ஷத்தை அடைகிறான்" என்று பகவான் கீதையில் கர்மயோகத்தின் மேன்மையை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

முற்றும்.

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்
## அத்தியாயம் 3 : வேதங்கள்



*3-8 வேதங்களில் விஞ்ஞான உண்மைகள் தொடர்ச்சி :*

பதவி சார்ந்த பெயர்கள் நிரந்தரமானவை. ஆனால் வசிஷ்டர், யாக்ஞவல்க்யர் போன்ற மானிடப்பெயர்கள் வருவது பற்றி ஐயம் எழுவது இயல்பே. ஆனால் அவை ஆதிகாரிக புருஷர்கள் என்று சாஸ்திரம் சொல்லுகிறது. அதாவது, உரிய தவம் செய்து, வேதப்பொருளை விளக்குதல் போன்ற தெய்வீகப்பணிகளுக்கு இறைவனால் ஆணையிடப்பட்ட ஜீவன்கள். இது, அடுத்த பகுதியில் சொல்லப்படும் ஸப்தரிஷிகளால் செய்யப்படுகிறது. இங்கே செய்வதற்கு ஆணையிடப்படும் பணி நிரந்தரமானது. ஆனால் வெவ்வேறு காலங்களில் இவற்றைச் செய்கின்ற ஜீவன்கள் வெவ்வேறானவர்கள்; எனவே, அவர்கள் குறிப்பிட்ட பணிகளுக்கென நியமிக்கப்பட்ட தேவதைகளுக்கு ஒப்பானவர்கள். இவ்வாறே இத்தகைய பெயர்கள் வேதங்களில் வருவது, வேதங்களின் காலம் கடந்த நிலையைப் பாதிக்காது. வேதங்களில் வரும் பெயர்கள் எல்லாவற்றையும் சரித்திரத்தில் காணப்படும் பெயர்களுடன் தொடர்பு படுத்தவும் முடியாது என்பதை கருத்திற் கொள்ள வேண்டும்.

தொடரும்..

## பிக்ஷாவந்தனம் – 2024

ஜெகத்குரு காஞ்சி ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகளுக்கு வேதபாரதி சார்பாக பிக்ஷாவந்தனம் செய்வதாக முடிவு செய்யப்பட்டு ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஸ்வாமிகளை சந்தித்தபோது அவராலே கொடுக்கப்பட்ட தினத்தில் ஸமர்ப்பணம் செய்யப்பட்டது.

மங்களகரமான ஸ்வஸ்தி ஸ்ரீ குரோதி வருஷம், ஆவணி மாதம், 6-ம் தேதி, 22.08.2024 குருவாரம், மஹா சங்கடஹர சதுர்த்தி நன்னாளில், காஞ்சி ஓரிக்கையில் சாதுர்மாஸ்ய விரதத்தில் இருக்கும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு வேதபாரதி சார்பாக சுமார் 500 பேர் கலந்து கொண்டு, வேலூர் ப்ரம்மஸ்ரீ கணேச சாஸ்த்ரிகள், வேளச்சேரி ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்த்ரிகள் முன்னிருக்க மஹாமஹோபாத்யாய முல்லைவாசல் ப்ரம்மஸ்ரீ Dr.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகளின் திருக்கரங்களினால் பெரியவாளுக்கு பிக்ஷாவந்தனம் ஸமர்ப்பணம் செய்யப்பட்டது.

முன்னதாக ஸமர்ப்பணம் செய்வதற்காக பெரியளவிலான தானியங்கள், காய்கறிகள், புஷ்பங்கள், மஹா ஸ்வாமிகள் மணி மண்டபத்திலிருந்து மேள தாளங்கள் முழங்க கடையநல்லூர் ஸ்ரீ ராஜகோபால்தாஸ் பாகவதர் முன் செல்ல வேதபாரதி குழுவினரால் பெரியவாளின் விரத மண்டப ஸ்தானத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

அனைத்தையும் ஆனந்தமாக ஏற்றுக்கொண்ட பெரியவா சந்த்ர மௌலீஸ்வர பூஜைகள் முடித்து அவரது திருக்கரங்களினாலே அனைவருக்கும் தீர்த்தப் பிரசாதம் வழங்கினார். மேலும், வேதபாரதியைச்

சார்ந்த ஒவ்வொருவருக்கும் சென்றடையும் வகையிலும், வேதபாரதியின் செயல்பதாகைகளை கவனித்து ஒவ்வொரு பணிகளையும் குறிப்பாக எடுத்துச் சொல்லி, ஊக்கப்படுத்தி ஆசிகளை வழங்கி அனுக்ரஹ பாஷணம் செய்தார்கள்.

இந்த பிக்ஷாவந்தனம் சிறப்பாக நடைபெறும் பொருட்டு தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வேதபாரதி சார்பாக தலா மூவரை ஒருங்கிணைப்பாளர்களாக கொண்டு ஒரு மாதத்திற்கும் மேலாக இதற்கான பணிகளும் ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

பிக்ஷாவந்தனம் ஸமர்ப்பணம் செய்வது சாதுர்மாஸ்ய விரத காலம் என்பதால் அதன் தாத்பர்யம் அனைவருக்கும் தெரிய வேண்டும் எனும் நோக்கில் காணொளி வாயிலாக ஸ்ரீ சுவாமிநாதன் அவர்களின் ‘சந்நியாசமும் - சாதுர்மாஸ்யமும்’’ எனும் தலைப்பில் சொற்பொழிவு ஏற்பாடு செய்யப்பட்டு அதில் 300க்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர்.

பிக்ஷாவந்தனம் பலன் பலருக்கும் கிடைக்க வேண்டும் என்பதால் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் வீடு வீடாக சென்று ஒவ்வொருவரையும் சந்தித்து நன்கொடை பெற்றனர். இதன் தாக்கமாகவும், பிக்ஷாவந்தன ஸமர்ப்பண நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக காஞ்சி ஓரிக்கைக்கு புதுவையிலிருந்து ஏழு பேருந்துகள், நான்கு கார்கள், சென்னை, ஊரப்பாக்கம் ஐந்து வாகனங்கள் மற்றும் கார்களில் பெருமளவில் மக்கள் வந்திருந்தார்கள்.

புதுச்சேரி வேதபாரதி ஏற்பாட்டில் பேருந்துகள் மூலமாக புதுவை சங்கரா மேல்நிலைப்பள்ளி மற்றும் அமிர்த வித்யாலயம் பள்ளி மாணவர்கள் அவர்களது

பெற்றோர்களுடன் கலந்து கொண்டு பெரியவாளிடம் ஆசீபெற்றனர்.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வேதபாரதி சார்பாக மிகப்பெரியஅளவில் நடைபெற்றஇந்த பிக்ஷாவந்தன நிகழ்ச்சியில் புதுச்சேரி சட்டமன்றஉறுப்பினர்கள் ஸ்ரீ சிவசங்கர், ஸ்ரீ லட்சுமிகாந்தன் ஆகியோர் மற்றும் பிரபல எழுத்தாளர் டாக்டர்.சுதா சேஷய்யன் அவர்களும் வேதபாரதி அழைப்பில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மாலையில் மதுரை நீலா மாமி தலைமையில் பள்ளி குழந்தைகள் நாம சங்கீர்த்தனம் செய்தனர்.

நிகழ்ச்சியின் நிறைவாக கடையநல்லூர் ஸ்ரீ ராஜகோபால்தாஸ் பாகவதரின் குருநாம சங்கீர்த்தனம் நடைபெற்றது. கடைசிவரை அமர்ந்து நாம சங்கீர்த்தனத்தை ருசித்து ரசித்த ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரியவா நிறைவாக மீண்டும் ஒருமுறை ஆசிகளை வழங்கினார்கள்.

காலை முதல் மாலை வரை கலந்து கொண்ட அனைவருக்கும் ஆரோக்கியமான உணவு வழங்கப்பட்டது. மாலை பேருந்துகளில் இல்லம் திரும்புபவர்களுக்கும் அவர்களது கைகளில் உணவுப் பொட்டலங்கள் இரவு உணவிற்காக கொடுக்கப்பட்டது.

மொத்தத்தில் அனைவரும் ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகளின் பூரண குருவருள் பெற்று மகிழ்ந்தனர். ஜெகத்குருவின் அனுக்ரஹம் நிறைந்து கிடைத்திற்று.

**ஜெய ஜெய சங்கர! ஹர ஹர சங்கர!!**

**- ஆதிரையன்**

# பூஜ்ய ஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள் ஆராதனை – 01.08.2024

பூஜ்ய ஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள் ஆராதனை 01.08.2024 அன்று சென்னை, மந்தைவெளி ஸ்ரீ சங்கர குருகுலத்தில் வேதோக்தமாக நடைபெற்றது. 5ம் ஆண்டு ஆராதனையில் வேதபாரதியில் வேதம் பயிலும் மாணவர்கள் 25 பேர் கலந்து கொண்டு சூக்தங்கள் பாராயணம் செய்தார்கள். நன்மங்களம் ஸ்ரீமான் ராகவ கனபாடிகள் பாடசாலையில் உள்ள தனது சிஷ்யர்களுடன் வந்திருந்து சங்கல்பம் செய்து வேதபாராயணம் செய்தார்கள். மயிலாப்பூர் மஹாமஹோபாத்யாய க்ருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் தர்மபத்னி மாதுஸ்ரீ பிரேமா மாமி கலந்துகொண்டு ஸ்வாமிகள் நினைவுகளையும் நாம் செய்ய வேண்டியதையும் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். ஸ்வாமிகள் எழுதிய தர்மத்தின் குரல் புத்தக கருத்துக்களை மந்தைவெளி ஸ்ரீ கணேஷ் நல்ல குறிப்புகள் கொடுத்தார்கள். வேதபாரதியின் மீது பற்றும் பாசமும் கொண்டு ஆதரவு கொடுத்து வரும் ப்ரும்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள் கலந்து கொண்டு நடத்திக் கொடுத்தார்கள். எல்லோருக்கும் நல்ல ஆச்சாரமான ப்ரசாதம் வழங்கப்பட்டது. நமது ஸ்வாமிகளின் விருப்பத்தின்படி சத்சங்கம் கூடி ப்ரார்த்தனை செய்து நல்ல ஆசாரமான உணவு எடுத்துக்கொண்டு அவரவர்கள் இல்லத்திற்கும் ப்ரசாதம் கொடுத்துவிட ஸ்வாமிகள் அனுக்ரஹம் செய்தார்கள்.

வேதபாரதி.

# ஔவை விழா – 2024
## குத்தாலம்

வேதபாரதி ட்ரஸ்ட், சுபிக்ஷா ஹிந்தி வித்யாலயா, மங்கள சக்தி ஸமிதி அமைப்புகள் இணைந்து குத்தாலம் லலிதா மஹாலில் 04.08.2024 ஞாயிறு காலை 9.00 மணி முதல் பகல் 1.30 மணி வரை ஔவை விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. 03.08.2024 அன்று மதியம் முதல் விழாவிற்கான ஏற்பாடுகளை மங்கள ஸக்தி ஸமிதியினர், சுபிதா ஹிந்தி வித்யாலயா குழுவினர் மிக நேர்த்தியாக செய்திருந்தனர். 600 க்கும் மேற்பட்ட பள்ளிக்குழந்தைகளை கடந்த 1 மாதமாக தொடர்பு கொண்டு, பயிற்சி கொடுத்து அதில் தேர்வு செய்யப்பட்ட 200 குழந்தைகள் 04.08.2024 அன்று காலை 8.30 மணி முதல் அரங்கத்தில் தங்கள் பெற்றோர்களுடன் பதிவு செய்திருந்தார்கள். 9.00 மணிக்கு நடுவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கி அவர்களுக்கான சிறப்பு ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் தஞ்சாவூர் ஸ்ரீ ராமகிருஷ்ணா மடம் தலைவர் ஸ்ரீ விமூர்த்தானந்த மஹராஜ் அவர்களின் திருக்கரங்களால் வழங்கப்பட்டது. சுபிக்ஷா ஹிந்தி வித்யாலயா, மங்கள சக்தி ஸமிதி தன்னார்வ தொண்டர்களின் பணி பாராட்டுக்குரியது. எல்லாருக்கும் மதிய உணவுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது. குத்தாலம் ஸ்ரீமதி ஜானகி அவர்களின் திட்டமிடுதல், செயல்படுத்துதல் இறைவனுக்கு மிகுந்த பிடித்தமான செயல். ஸ்ரீ பாலசுப்ரமணியன் அவர்களின் தொண்டு மகத்தானது. வேதபாரதி அமைப்பாளர் மயிலாடுதுறை ஸ்ரீ ராமசாமி கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

- ஆசிரியர்

## யுவஸ்ரீ வாழ்வியல் பயிலரங்கம் - திருச்சி

கடந்த ஆகஸ்ட் மாதம் 11ஆம் தேதி திருச்சி, ஸ்ரீரங்கம், ஸ்ருங்கேரி வித்யா பாரதி பவனத்தில் யுவஸ்ரீ (பெண் குழந்தைகளுக்கான வாழ்வியல் பயிலரங்கம் நடைபெற்றது).

பாரம்பரிய விளையாட்டுகள் மூலம் குடும்ப மற்றும் சமூக உறவு விளக்கம் திருச்சி ஸ்ரீ சந்திரசேகரன் ஜி அவர்களால் வழங்கப்பட்டது.

சென்னை திருமதி. உஷா சுந்தரேசன் அவர்கள் பெண் குழந்தைகளுக்கும், பெற்றோர்களுக்கும் சமுதாய விழிப்புணர்வு மற்றும் குடும்ப உறவுகள் பற்றி விளக்கினார்கள்.

ஸ்ரீரங்கம் வைஷ்ணவ சம்பிரதாயம் கிருஷ்ணகுமார் சாஸ்த்ரிகள் காலை முதல் இரவு வரை நேரம் தவறாமல் நாம் எளிமையாக கடைபிடிக்க வேண்டிய சதாசார விஷயங்களை அழகாக விளக்கினார். பெற்றோரும் குழந்தைகளும் நிகழ்ச்சியின் முத்தாய்ப்பான பதிவுகளை பாராட்டினார்கள். நிறைவாக Dr.பிரபுசரண் அவர்கள் நமது சனாதன தர்ம கார்யங்களில் உள்ள விஞ்ஞான பின்னணி குறித்து விளக்கி நிகழ்ச்சியை நிறைவு செய்தார்கள். நிகழ்ச்சி ஏற்பாடுகள் திருச்சி வேதபாரதி உறுப்பினர்களால் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

**வேதபாரதி செய்திகள் புத்தக வங்கி கணக்கு எண்கள் விபரம்**

**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.200 |
| 10 வருட சந்தா | ரூ.1500 |

வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட

**VEDABHARATHI SEITHIGAL**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010246740 | IFSC : CIUB0000262**

# JAI SHRI AARADHANA TOURS - (SINCE 2000)

**All India Inbound and South East Asia Conducted package Tour Organizers**

**S. Sundaresan 9840651441 | shriaaradhanatours@gmail.com.**

## SRI LANKA - "SRI RAMAYANA TOUR"

Colombo Headquarters of SriLanka, Anuradhapura (Ponniyin Selvan) Jaffna (Yazpanam), Thiru Ketheeswaram, Thirukoneswaram, (Trincomalee), Manavari Agastheeswaram, Naga Theevu. Nallur Ancient Sri Murugan Temple, Kathirkamam, Kandi Bhudha Temple of Tooth Relic, Nuwara Elia Ashokavanam, Ravana Falls, Seetha Amman Temple. Sri Hanuman Met Janaki Devi And hand over the Ring of Sri Ramachandra Murthi (Sundara Kandam), Ramboda Hanumanji Sri Ram Temple, Place of Seetha Amma's Agni Parikshai, Vibhishana Pattabhishekam, Sighriya Ravana Fort, Damulla Caves.

**9 Nights 10 days | Cost Per Person :- Rs.36780/- ( Approx)**

**"Group of 5 persons and more we provides Discount."**

**1st Batch : 17.11.2024**
**2nd Batch : 17.01.2025**

**ACCOMMODATION :-**

3* Basic Delux Rooms,
Food :- Pure Vegetarian Morning Breakfast, Night Dinner,
Vehicle :-Ac Super delux Push back coach.
Tour escort ,Guide :- English, Tamil speaking Person. ( Driver)

- Free Visit a Tea Factory, Tea Plantation with cup of Tea Each
- Free KING COCONUT on arrival
- Free Visit for Art and Craft center
- Free Visit for Gem Museum and Lapidary
- Free Visit for Ceylon Batik Factory
- Free Visit for Ceylon Spices Garden
- Free Head & Shoulder massage



**Exclusions :-**

Air Fare, on arrival visa fee, foreign Exchange,
Noon Lunch, From our vehicle parking Local Auto Rickshaw, Boating,
Entry Tickets, All Accommodation Hotel Restaurants Room boys,
Servers Tips, Guide, Driver Tips, No Visa Charges
And Anything which is not mentioned in the inclusions

# ராஜலட்சுமி கல்யாண மண்டபம்


வேளச்சேரி மெயின் ரோடு, தண்டீஸ்வரம்,
சென்னை - 600 042.




- 800 பேர் அமர்ந்து ஆசிர்வதிக்க ஏ/சி ஹால்.
- சகல வசதிகளுடன் கூடிய மணமகன், மணமகள் அறைகள்.
- உறவினர்கள் தங்க - குளிரூட்டப்பட்ட அறைகள்.
- விசாலமான கார் பார்க்கிங்.
- வெகு அருகில் சிவன், பெருமாள் ஆலயங்கள்.
- நகருக்கு மத்தியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற மண்டபம்.
- 24 மணி நேரமும தண்ணீர் & மாடுலர் கிச்சன் வசதி.

தொடர்புக்கு

**48625585 / 9840545585**


வேதஸ்ரேணி
Mini Function Hall (A/C)
Traditional Ambience with Modern Amenities
Ayush Homam | Upanayanam | Birthdays | Engagement |
Sangeeth | Mehendi | Wedding | Valakaapu | Seemandham |
Shastiapthapoorthi | Sathabhishekam | Corporate Events
Ac Hall & Dining | Lift | Power Back Up | Car Parking |
CCTV | Hall Capacity- 150 -200 | Guest Rooms-2
Vedashreni, No 215, 3rd Street, Ramnagar Vijayanagar, Velachery, Chennai-42
95002 67471 | 98414 46897
VEG FOOD ONLY


"Let the Sun's energy light up your Life"
MAAYA
SOLAR POWER
No.1/21, Sriram Nagar, 2nd Street (North)
Mudichur Road, West Tambaram, Chennai - 600 045.
DOMESTIC
STREET LIGHT
COMMERCIAL
PARKING
INDUSTRIAL
WATER HEATER
POWER PLANT
AGRICULTURAL
ONGRID SYSTEM
OFFGRID SYSTEM
HYBRID SYSTEM
PM SURYA GHAR MUFT BIJLI YOJANA SCHEME
MINISTRY OF
NEW AND
RENEWABLE ENERGY
Solar Subsidy
Application Process 2023
MNRE
APPROVED
CHANNEL PARTNER
Subsidy Provided for Domestic Projects :
1 KW - Rs. 30,000/-
2 KW - Rs. 60,000/-
3 KW & Above - Rs. 78,000/-
9176899001, 9176899002, 9962000788
Email ID: maaya@maayasolarpowertech.com I Website:www.maayasolarpowertech.com

# பூக்களோடு பேசுவோம்

**டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்“**

## “தெளிந்த மனம் எனும் மனோரஞ்சிதம்”



பூக்களோடு பேசுகிறீர்களா வாசகர்களே,

இதுவரை பேசாவிட்டாலும் இனிமேலாவது பேசுங்கள். உங்கள் கையில் இருக்கும் மலர் உங்கள் மனதின் எண்ணங்களை, ஏக்கங்களை, இன்ப துன்ப உணர்வுகளை இறைவனிடம் எடுத்துச் செல்லும், சொல்லும் அற்புத சாதனம். அதனால் தான் நம் முன்னோர்கள் மலர்களால் இறைவனை வழிபடும், அலங்கரிக்கும் முறைதனை நமக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். எனவே ஒவ்வொரு பூவுடனும் பேசுங்கள். மலர்களுடன் பேசுவதும் ஒரு கலை அன்போடு பேசுங்கள். இதோ இந்த மனோரஞ்சித மலரோடு உங்கள் பேச்சைத் தொடங்குங்கள். இடையறாத வாழ்க்கை ஓட்டத்தில் யாருடனும் பேசுவதற்கு நேரமில்லை என்று உறவுகளை, நட்புகளை தூரத்தில் வைத்துவிட்டோம். மலர்களையாவது மனதின் நெருக்கத்தில் வைத்துக் கொள்ளுங்கள். மலர்கள் நம் மனதைக் கவர்வதற்குக் காரணம் அதன் நிறம், மணம், வடிவம் ஆகியவைதான். இந்த பூமாதேவியை அழகுறச் செய்வதற்குத்தான் ஆண்டவன் கோடிக்கணக்கான மலர்களைப் படைத்திருக்கிறான் என்றாலும் நாம் அறிந்திருப்பது நூற்றுக்கணக்கானவையே. பெண்ணின் மனதை யாராலும் புரிந்து கொள்ள முடியாது என்பது போல் பூக்களின் விவரங்களையும் நம்மால் முழுமையாக

அறிந்துகொள்ள முடியாது. இதன் நிறத்திற்கும், வடிவிற்கும் தாவரவியல் பலவிதமான விளக்கங்களைக் கொடுத்திருந்தாலும் ஆன்மீக ரீதியான விளக்கங்களும் இருக்கின்றன. உளவியல்படி, ஒவ்வொரு உணர்வுத்தளத்திற்கும் (stages) ஒவ்வொரு நிறம் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் அடிப்படையில் நாம் பேசப்போகும் மனோரஞ்சிதம் பச்சையாக பூத்து, மஞ்சள் நிறமாகமாறக்கூடியது என்றாலும் இடையில் சில நாட்கள் பச்சை கலந்த மஞ்சள் நிறமாக இருக்கும். இதற்கான ஆன்மீகத்தளம் மனத்தளம் (mental status) ஆகிறது. எனவேதான் மனோரஞ்சிதம் என்ற பெயரைப் பெறுகிறது. தூய தமிழில் இதனைத் **"தெளிந்த மனம்"** என்று அறியப்படுகிறது. இதன் ஆன்மீகப் பெயர் **"ஹரசம்பக புஷ்பம்"** என்பதாகும்.

புஷ்பசாஸ்திரம் இந்த மலர் பற்றிக் கூறுவது என்னவென்றால் குடும்ப ஒற்றுமையின்மை மற்றும் தம்பதியர்களிடையே ஏற்படும் புரிதல் இல்லாத விலகல் ஆகிய பிரச்சினைகளுக்கு, அம்பிகையை இந்த மலரால் அர்ச்சித்து தீர்வு பெறலாம் என்கிறது. அதனால் தானோ என்னமோ, ஸ்ரீ வனதுர்காபரமேஸ்வரி ஆலயத்தில் (கும்பகோணம் சூரியனார் கோவிலிலிருந்து மயிலாடுதுறை சாலையில் 10 கி.மீ. தொலைவில் கதிராமங்கலத்தில் அமைந்துள்ளது) பற்பல விசேஷங்கள் நிறைந்த ஆலயம். இங்கே பக்தர்கள் தங்கள் பிரச்சினைகளுக்கு அதற்கேற்ற புஷ்பங்களைக் கொண்டு அர்ச்சனைகள் செய்து பலன் பெறுகிறார்கள். துர்க்கை கிழக்கு நோக்கி எழுந்தருளியிருப்பதால் விசேஷம் என்கிறார்கள்.



அகஸ்திய முனிவரால் பிரதிஷ்டை செய்யப்பட்டு, மிருகண்டு முனிவரால் வழிபாடு செய்யப்பட்ட இத்தலம், கவிச்சக்ரவர்த்தி கம்பரால் நாள் தவறாமல் வழிபாடு செய்யப்பட்டு வந்த ஸ்தலமாகவும் உள்ளது. தொடர்ந்து சனிக்கிழமைகளில் அம்பிகையை மனோரஞ்சித மலர்களால் வழிபட மன அமைதியும் தூய்மையும் கிடைக்கப் பெறுவார்கள் என்பது அகஸ்தியர் வாக்கு என்று இங்குள்ள அர்ச்சகர்கள், பக்தர்களுக்கு எடுத்துச்சொல்கிறார்கள். இதனைப் பெண்கள் கூந்தலில் சூட்டி மகிழ்வதைவிட அம்பிகைக்கு அணிவித்து அல்லது அர்ச்சித்து மன நிறைவடையவே விரும்புகிறார்கள், இதன் வசீகர மணத்தினால் இதனை அர்த்த ஜாமபூஜைக்குரிய மலராகக் கருதி, இறைவனையும், இறைவியையும் பள்ளியறைக்கு அனுப்பும் முன் ஆலயங்களில் பயன்படுத்துகிறார்கள். இதனைக் கண்கூடாக திருமயிலையில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ கற்பகாம்பாள் உடனுறை ஸ்ரீ கபாலீஸ்வரர் ஆலயத்தில் சோமாஸ் கந்தரின் அலங்காரத்தில் தரிசிக்கலாம்.

இவ்வாறு அலங்கரிக்கப்படுவதற்கு ஒரு முக்கிய காரணம் இருக்கிறது. மன வேதனையுடன் ஒட்டாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் தம்பதிகளிடையே "அன்யோன்யபாவத்தை" ஊக்குவிக்கக் கூடியது இந்த மலர் என்பதை உணர்த்தவே இந்த வழக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்கிறார்கள். விஷயம் தெரிந்த அர்ச்சகர்கள் இந்த மலரின் மேன்மையை அடுத்த இதழிலும் தொடர்ந்து பார்ப்போம். அதுவரையில் உண்மையாகவே மனோரஞ்சித மலர்கள் வாங்கிவந்து அத்துடன் மனதோடு மனதாய் பேசித்தான் பாருங்களேன்.

தொடரும்...

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 3 பகுதி - 45

இந்த இடத்தில் மீண்டும் ஒரு முறைநான் முன்பே எழுதிய 'Self-Motivation For College Youth' பக்கத்தைப் பாருங்கள்.

| | |
|---|---|
| Self-understanding | - தன்னைத்தானே அறிதல் |
| Self-Analysis | - தன்னைத்தானே உள்நோக்குதல் |
| Facing Failures | - தோல்வியை எதிர்க்கொள்ளுதல் |
| Goal Setting | - குறிக்கோள் |
| Motivation | - ஊக்கம் |
| Positive Thinking | - நேர்மறை எண்ணங்கள் |

இதைத்தாண்டி 'SOLES'என்படும் 'Self-Organised Learning Environments For Strength' என்பது மிகவும் முக்கியம் என்பதை பெற்றோர்கள் கவனிக்க வேண்டும்.

பொதுவாக வாழ்க்கை முழுவதும் கற்றுக் கொண்டேயிருப்பது தான் வாழும் முறை. அறிவுசார்ந்த விஷயமல்ல, உணர்வு சார்ந்த விஷயமில்லை. ஆனால் எப்படி வாழ வேண்டும் என்பது தான் 'SOLES'.

“சுயமாக கட்டமைத்து கற்றுக் கொள்ளும் சூழல் உருவாக்குவது மூலம் பெறும் சக்தி” என்று மொழி பெயர்த்தாலும் இந்த கற்றல் தருவது பொறுப்பு” (Responsibility).

“பொறுப்பு ஏற்பது’’ என்பது உங்களை தலைவனாக்குகிறதோ இல்லையோ சக்தியளிக்கும். இத்தகைய சக்தி உங்கள் வாழ்க்கையை சரியான

முறையில் செலுத்திக் கொள்ள உதவும்.

எதை, எப்பொழுது எந்த வகையில் செய்ய வேண்டுமென்பது பொறுப்புள்ளவர்களுக்கு தானாக வரும். யாரோடு எப்படி ஒத்துழைத்தால் இந்த பொறுப்பை நிறைவேற்ற முடியுமென்று கற்றுத் தரும். யாரை விலக்க வேண்டும், யாரோடு இணைய வேண்டும் என்று புரிதல் வரும்.

இது பெற்றோர்கள், கல்விக்கூடங்கள் ஓரளவிற்கு கற்றுத் தருவார்கள். ஆனால் 'Self Organised Learning' என்பது உள்ளிருந்து வர வேண்டும்.

இதிகாசங்களில், புராணங்களில் இவற்றிற்கான கதைகள் கொட்டிக் கிடக்கின்றன. பக்தி இலக்கியங்கள் வழி நடத்துகின்றன. ஆனால் நமக்கு இங்கிருந்து எடுத்துச் சென்று அங்கு பிரித்து, மேய்ந்து மீண்டும் இங்கு கொண்டு வந்து ஆங்கிலத்தில் கொட்டினால் தான் நமக்கு புரியும்.

உங்கள் குழந்தைகளிடம் 6 வயதிலிருந்து உரிய சின்னச் சின்ன பொறுப்பளித்து பழக்கி “+2” முடித்த பின்னர் நிமிர்ந்து பார்த்தால் ஓங்கி வளர்ந்து நிற்கின்றமகன் அல்லது மகள் பொறுப்புடன் இருப்பது அளிக்கும் பெருமை கல்வி உயர்வோ, செல்வம் சேர்க்கும் உயர்வோ அளிக்காது என்பதை பெற்றோர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

பணி, திருமணம் என்று திட்டமிடும் பொழுது அவர்களோடு கலந்தாலோசித்து, பேசி, பக்குவப்படுத்தி, திருமண பந்தம் என்பது பொறுப்பு மிக்கது. அந்த உறவை தக்க வைத்துக் கொள்வது உழைப்பு மிகுந்தது. சுயநலமற்றபார்வை வேண்டும், நம்மை விட மூத்தவர்களையும், நம்மை விட வயது குறைவானவர்களிடமும் சதா பழக வேண்டிய

கட்டாயம் இதிலுண்டு; பணிவும், அன்பும் மிகுந்த தலைமைப்பண்பு தானாக வரும். அதற்கு வழி விட வேண்டும்.

போற்றுதலும், தேற்றுதலும், புகழ்வதும் எத்தனையுண்டோ அத்தனை சண்டையும், கூச்சலும், சமரசமும் உண்டு.

இதை அனுபவமிக்க பெற்றோர்களைத் தவிர வேறு யார் இதை பேச இயலும்? திருமணம் செய்து வைத்து விட்டு, “காலுக்கு உதவாததை தூக்கி எறி” என்பது சரியா? என்று யோசியுங்கள்.

“எட்பக வன்ன சிறுமைத்தே ஆயினும்
உட்பகை உள்ளதாம் கேடு” (அதிகாரம் 89, குறள் 889)

“உட்பகை எனும் மனவிகாரம் மிகச் சிறிய அளவானாலும் உடனே நீக்க வேண்டும். இல்லையெனில் ஒரு எள்ளின் பிளவு போல வெகு சிறியதாக இருந்தாலும் உட்பகை நாசம் உண்டாக்கும்” என்கிறார் வள்ளுவர் பெருமான்.

தொடரும்...



## இராமாயணம் தரும் படிப்பினை

சென்றமாத தொடர்ச்சி...

பிறகு இராமர், தான் சீதையைப் பறி கொடுத்ததைப் பற்றியும், வாலி மூலம் தனக்கு இழைக்கப்பட்ட அநீதியைப் பற்றியும் சுக்ரீவனிடம் பகிர்ந்து கொண்டனர். சீதையைப் பற்றி இராமர் பேசும்போது மிகவும் மனம் நொந்து வேதனையுடன் பேசினார். அப்போது சுக்ரீவன் தனக்கு ஏற்பட்ட சோதனைகளையும், அநீதியையும் சொல்லி ஸ்ரீராமரை சாந்தப்படுத்தினார். அப்போது கூறுகையில் வெகுநாட்களுக்கு முன்பு ஒரு அழகிய பெண்ணின் அழுகுரல் கேட்டு நாங்கள் வெளியே ஓடி வந்தோம். ஆகாய மார்க்கமாக ஒரு அரக்கன் ஒரு பெண்ணைக் கடத்திச் சென்றான். அந்த அபலைப் பெண் தன்னைக் காப்பாற்றுமாறு கதறினாள். எங்களால் அவளுக்கு உதவ முடியவில்லை. நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே தனது அணிகலன்களை கழற்றி தனது உடுப்பில் ஒரு துண்டைக் கிழித்து அதில் நகைகளை மூட்டையாகக் கட்டி கீழே போட்டாள். நாங்கள் அதை எடுத்து பத்திரப்படுத்தி வைத்திருக்கிறோம் என்று சுக்ரீவன் கூறினான். ஹனுமனிடம் அந்தத் துணி மூட்டையை எடுத்து வருமாறு கூறினான். அதில் இருந்த நகைகள் சீதையுடையது தான் என ராமர் உறுதிப்படுத்தினார். பிறகு இலக்குவனிடம் காட்டினார். அவரால் சீதை காலில் அணிந்திருக்கும் நகையைத்தான் அடையாளம் காட்ட முடிந்தது. தினமும் அதை மட்டுமே பார்த்ததால் அடையாளம் காட்ட முடிகிறது என்றான். எப்படிப்பட்ட உயர்ந்த பண்புகளைக் கொண்டவன் லட்சுமணன் என்பதை இதன் மூலம் நாம் புரிந்து

கொள்ள முடிகின்றது. ஸ்வாமி விவேகானந்தரின் கூற்றுப்படி நமது நாட்டில் மனைவியைத் தவிர அத்தனை பெண்களும் தாய், சகோதரிகளுக்குச் சமமானவர்கள்.

இராமன், சுக்ரீவனிடம் எனது முன்னோர்கள் சகரன் கடலைத் தோண்டினார். பகீரதன் விண்ணிலிருந்து கங்கையைக் கொண்டுவந்தான். தமாந்தாதா என்ற தர்மஞானி அரசன் ஒரே இடத்தில் அருகருகே புலியும், பசுவும் நீர் அருந்தும் அளவிற்கு உத்தமனாக இருந்தான். எனது தந்தை தசரதன் சம்பாசுரனை வதம் செய்து இந்திரனுக்கு அவனது உலகை மீட்டுக் கொடுத்தார். நான் கட்டின மனைவியைக்கூட காப்பாற்றமுடியாமல் அவளது துன்பத்தையும் நீக்காமல் வில் / அம்பு வைத்துக் கொண்டு பழிச்சொல்லையும் சுமக்கிறேன் என்றான். அப்போது ஹனுமன் இராமனைச் சமாதானம் செய்தான்.

பிறகு சுக்ரீவன் ராமனிடம் வாலி விஷயம் பேச ஆரம்பித்தான். மாயாவி என்பவனுக்கும் வாலிக்கும் இடையே ஒரு ஆண்டுக்கு மேலாக யுத்தம் நடந்தது. வெகு காலம் வாலி வெளியே வராததால் அவன் இறந்து விட்டான் என்று கருதி கிஷ்கிந்தா அரசு என்னை அரசன் ஆக்கியது. ஆனால் நடந்தது என்ன என்றால் மாயாவி தான் அழிந்தான். வாலி கிஷ்கிந்தையை நோக்கி வந்து கொண்டிருந்தான். அங்கு அரியாசனத்தில் அமர்ந்த என்னைப் பார்த்ததால் கோபம் வந்தது. என்னை அடித்தான், உதைத்தான், வசை பாடினான். நான் மன்னிப்பு கேட்டு எவ்வளவோ சொல்லியும் நான் சொல்வதை ஏற்றுக் கொள்ளும் மன நிலையில் இல்லை. உலகில் எந்த மூலைக்கு நான் சென்றாலும் என்னை ஓட

ஓட விரட்டியடித்தான். நாம் இப்போது இருக்கும் பூமி வாலிக்கு ஒரு முனிவர் மூலம் சாபம் கிடைத்த இடம். துர்துபி என்ற அசுரனின் இறந்த உடலை இங்கு வீசி எறிந்ததால் வாலிக்கு சாபம் கிடைத்தது. இந்த மண்ணில் வாலி கால் வைத்தால் அவனது தலை வெடித்துவிடும். அதனால் இங்கு வாலி வரமாட்டான் என்ற உறுதியில் நாங்கள் நிம்மதியாக இருக்கிறோம். எந்த வீட்டில் சகோதரர்கள் அமைதி, அன்புடன் சுமூகமாக இருக்கிறார்களோ அந்த வீடே ஸ்வர்க்கம் தான். அதற்கு நேர்மாறாக பகைமை மேலிட்டு இருந்ததால் அந்த வீடு நரகத்திற்கு சமம். பிறகு இராமனின் உத்திரவின்படி சுக்ரீவன் வாலியைச் சண்டைக்கு அழைத்தான். முதல் நாள் சண்டையில் வாலியிடம் நல்ல அடிபட்டுத் தாங்க முடியாமல், ராமர் இருக்குமிடத்திற்கு கண்கலங்கி ஓடி வந்துவிட்டான். இருவருக்கும் உருவம் ஒன்றுபோல் இருந்ததால் ராமரால் எதுவும், சுக்ரீவனுக்கு உதவ முடியவில்லை.

தொடரும்...


**ஸ்ரீ கோகுல கிருஷ்ணா கோசாலை**

**ஸ்ரீ கிருஷ்ணாமிருதம் பப்ளிக் சாரிடபள் ட்ரஸ்ட்**

**(80 G Available)**

**756 பசுக்கள் பராமரிப்பு செய்யும் ஸ்தாபனம்**

**1. கோ பூஜை செய்ய 2. கோ தானம் செய்ய**

**3. பசு பராமரிப்பு செய்ய**

**4. பிதுர்கள் திருப்தி அடைய – (மஹாளய பட்ச காலத்தில்)**



**பசு பாதுகாப்பு செய்வது கோடிபுண்ணியம்**

தொடர்பு : **ஸ்ரீ நடராஜன்**

ஊத்துக்கோட்டை, திருவள்ளூர் - 602 023

**8940224744 / 9363111799**

# சென்னை திருமயிலை ஸ்ரீகபாலீஸ்வரர் திருக்கோயில்

(செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.எட்., பரமக்குடி)

*சென்றமாத தொடர்ச்சி...*

*திருக்குளத்தின் மையத்தில் உள்ள நீராழி மண்டபம் சிறப்பானது. குளத்தின் மேற்குக் கரையில் எட்டுக்கால் மண்டபம் அருகில் ஜேஷ்டா தேவி சந்நிதி உள்ளது. வடமேற்கு மூலையில் 3 கால் மண்டபமும், தென்கரையில் ஞானப்பால் மண்டபமும், வடக்கில் சிவலிங்க மண்டபமும் உள்ளன. கிழக்கில் மாட்டுப் பொங்கலன்று அம்மன் நீராடும் இடம் உள்ளது. மேற்குக் கரையில் உள்ள சிறு மண்டபங்களில் தேவர் விழாவென்று சம்பந்தருக்கும் சிவநேயருக்கும் அபிஷேகம் நடைபெறுகிறது. இங்குப் பங்குனித் திருவிழாவின் போது திருஞானசம்பந்தர், பூம்பாவையை உயிர்ப்பித்த உற்சவமும் நடைபெறும். இக்குளத்தில் தைப்பூச நாளில் தெப்பவிழா சிறப்பாக நடைபெறும்.*

*மயிலையே கயிலை! கயிலையே மயிலை!!*

# சென்னை திருமயிலை ஸ்ரீகபாலீஸ்வரர் திருக்கோயில் - 3

*கலிங்க தேச அரசன் தருமனின் மகன் சாம்பவன் என்பவன் தனது பெரும் பாவங்களை தீர்க்க இங்கு வந்து, பங்குனி உத்திரத்தன்று இக்குளத்தில் நீராடி ஸ்ரீ கபாலீஸ்வரரைத் தொழுது முக்தி அடைந்ததாகத்தல புராணம் கூறுகிறது. இக்குளத்தில் தீர்த்தவாரி நிகழ்ச்சி நடைபெறுகிறது.*

*இக் கோயில் ராஜகோபுரம் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இதன் உயரம் 40 மீட்டர், 7 நிலைகளையும், 9 கலசங்களையும் கொண்டு திகழ்கிறது. கி.பி.1902 இல் கட்டப்பெற்றது. 1948-ல்*

*புனரமைக்கப்பட்டுக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதன்பிறகு 1982, 1996, 2014 ஆகிய ஆண்டுகளில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.*

*ராஜகோபுரம் அழகிய சுதைச் சிற்பங்களால் நிறைந்துள்ளது. பகீரதன்தவம், அட்ட வீரட்டங்கள், காளி கர்வபங்கம், கண்ணப்பநாயனார், பிட்டுக்கு மண்சுமத்தல் போன்ற 150 புராணக்காட்சிகள் இடம் பெற்றுள்ளன. சிவ பராக்கிரமம் எனும் நூலில் குறிப்பிடும் மச்சாரி, கூர்மாரி, நரசிம்மாரி ஆகிய சிவவடிவங்களை இங்கு காணலாம். ஒரு பக்கத்தில் யானையும் ஒரு பக்கத்தில் காளையும் உள்ள ரிஷப குஞ்சரம் சிறப்பானது. இதில் காளையின் மீது சிவனும் பார்வதியும், யானையின் மீது திருமாலும், லெட்சுமியும் அமர்ந்துள்ளனர். சிவபெருமான் தனது திருவோட்டை நீட்டிட, லெட்சுமி அன்னமிடுவது போன்ற காட்சி மிகவும் அற்புதம். மேலும் உமையவள் மடியில் விநாயகர் அமர்ந்திருப்பது மிகச்சிறப்பு.*

*இக்கோபுரத்தின் கிழக்கில் 10 தூண்களைக் கொண்ட மண்டபம் உள்ளது. உற்சவர் உலா செல்லுமுன் இதில் தங்கிச் செல்லும்.*

*தொடரும்....*

**புதிய கணக்கு எண்**

**வேதபாரதி குருகுலம் ட்ரஸ்ட்**

**வேதபாரதி - வேதவகுப்பிற்கான வங்கி கணக்கு எண்கள் விபரம்**

| | | |
|---|---|---|
| Account No | : | 510909010268668<br>Current Account |
| IFSC Code | : | CIUB0000262 |
| Bank | : | City Union Bank |
| Branch | : | Velachery |

## நாகையில் வேதபாரதியின் ஔவை விழா

*எதிர்கால சந்ததியினரை நல்வழிபடுத்தும் வேதபாரதியின் செயல்களில் ஒன்றான, பள்ளி மாணவச் செல்வங்களுக்கு ஆத்திசூடி, கொன்றைவேந்தன் பயிற்றுவிக்கும் ஔவைவிழா சென்னை, புதுவையைக் கடந்து நாகையிலும் நடைபெற்றது.*

*கடந்த 10.08.2024 சனிக்கிழமை நாகப்பட்டினம் "அமிர்த வித்யாலயம்" பள்ளியில் சீர்மிகு ஔவைவிழா நடந்தது. முன்னதாக 600க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு ஆத்திசூடி, கொன்றைவேந்தன் புத்தகங்கள் வழங்கி அவர்களுக்கு அவற்றை பயிற்றுவிக்கப்பட்டது.*

*பயின்ற அவர்களிடம் போட்டிகள் நடத்தப்பட்டு சுமார் 90க்கும் அதிகமானவர்களுக்கு முதல், இரண்டாம், மூன்றாம் மற்றும் ஆறுதல் பரிசுகளும், கலந்து கொண்ட அனைவருக்கும் விநாயகர், ஔவை படங்கள் போடப்பட்ட போட்டோக்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.*

*பரிசு பெற்ற மாணவர்களுடன் பெற்றோர்களும் விழாவில் கலந்து கொண்டனர். சுமார் 300க்கும் மேற்பட்டோர் நிறைந்திருந்த அரங்கில் மாணவச் செல்வங்கள் இசை நயத்துடன் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஆகிய பாடல்களை பாடி அனைவரையும் ஆனந்தத்தில் ஆழ்த்தினர்.*

*சாந்தி மந்த்ரம், நாட்டுப்பண்ணுடன் நிறைவுபெற்றவிழாவில் பள்ளி முதல்வர் ஸ்ரீ கி.சின்னையன் தலைமை ஏற்க, சிறப்பு விருந்தினர் புலவர் மு. சொக்கப்பன், பள்ளி மேலாளர் பிர.காயத்திரி மாதா ஆகியோர் சிறப்புரை ஆற்ற, வேதபாரதியின் செயல்பாடுகளை புதுவை வேதபாரதி வை.நடராஜன் எடுத்துரைக்க, புதுவை வேதபாரதி பொதுச்செயலாளர் அட்வகேட் சி.பட்டாபிராமன் நன்றியுரை வழங்கினார்.*




# ஸ்ரீ சங்கரா இலவச முதியோர் இல்லம்

ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை (Regd.)
பண்டித மேடு, திருப்போரூர் அருகில்

ஸ்ரீ காஞ்சி பெரியவர்களின் அருளாசியுடன், ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை ஓர் இலவச முதியோர் இல்லத்தை திருப்போரூர் அருகில் உள்ள பண்டித மேடு கிராமத்தில் நிர்வகித்து வருகிறது. அங்கு 50 முதியவர்கள் அமைதியாக வாழ்ந்து வருகின்றனர்; இந்த நிர்வாகம் உங்கள் ஆதரவை நாடுகிறது:

திருமண நாள், பிறந்த நாள், நினைவு நாள் போன்றவற்றில் ஒன்றை தேர்ந்தெடுத்து ரூ.3000/- அளித்தால் முதியோர் இல்லத்தின் ஒரு நாளின் செலவுக்கு ஆகும்.

தங்களுக்கு விருப்பமான தொகையை கீழ்க்கண்ட விலாசத்திற்கு "ஹிந்து சேவா சமாஜம் டிரஸ்ட்" **(HINDU SEVA SAMAJAM TRUST)** என்ற பெயரில் காசோலை அல்லது கணினி வழி வங்கி கணக்கு மூலமாக நேரடியாக அனுப்ப வங்கி கணக்கு எண்.: **914010003352646;** ஆக்ஸிஸ் பேங்க், துரைப்பாக்கம் கிளை, **IFS CODE : UTIB0001566** அனுப்பலாம். கணினி வழியாக அனுப்புவோர் அவசியம் பணம் அனுப்பிய விவரத்தை கீழ்காணும் எண்ணுக்கு எஸ்.எம்.எஸ். செய்யவும். இவ்வுதவி செய்பவர்களுக்கு 80G பிரிவின்படி வரிச்சலுகை உண்டு.

**ஸ்ரீ M. இராமகிருஷ்ணன் புதல்வர்கள்**
**அறங்காவலர்**
71, முதல் பிரதான சாலை, காந்தி நகர்,
அடையாறு, சென்னை - 600 020.
Cell : 93810 45601 | Email : amarabharathy7@gmail.com

# அயோத்தி - குழந்தை ராமரின் அற்புத தரிசனம் – 4

## (கனக்பவனமும் உள்ளே எழுந்தருளியுள்ள ஸ்ரீ ராம் பரிவார் மூர்த்தங்களும்)



அயோத்தி குழந்தை ஸ்ரீ ராமரின் அற்புத தரிசன தொடர் கட்டுரையைப் படிக்கும் அனைவரும் மானசீகமாகவாவது ஸ்ரீ ராம ஜென்ம பூமியில் சஞ்சரித்துக் கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். ஸ்ரீ வால்மீகி ராமாயண பவன் மகிமை அற்புதம் அல்லவா! பிரும்மாண்டம்! பவனின் அழகே அழகு! சரி. அடுத்து அயோத்தியின் அடுத்த முக்கிய மாளிகையைப் பார்க்கலாம். இதனை "கனக்பவன்" என்று பொதுவாகச் சொன்னாலும் இது "கைகேயிபவன"மாகத்தான் இருந்திருக்கிறது. தசரத மகாராஜாவின் பிரியத்திற்குரிய மனைவியான கைகேயி மாதாவிற்கு அவரே பரிசளித்த தங்க மாளிகை இது. கனக்பவன் என்றால் தங்க மாளிகை என்று பொருள். இதனை ஸ்ரீ ராமர், சீதையை மணம் முடித்து அயோத்திக்கு அழைத்து வந்தபோது, கைகேயி மாதா, சீதைக்கே பரிசாக அளித்துவிட்டதாக சொல்லப்படுகிறது.

அயோத்தியில் திரேதாயுக காலத்து மாளிகைகள் அனைத்துமே இப்போது பல்வேறு இந்து தெய்வங்கள் குடியிருக்கும் வழிபாட்டு ஸ்தலங்களாகவே இருக்கின்றன. அயோத்தி மக்களிடையே அபார பக்தி

சிரத்தையை உணர முடிகிறது. எப்போதும் உபன்யாசங்களும் பக்தி சங்கீதமும் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. தினந்தோறும் விழாக்கோலம் பூண்டிருப்பது போல் இருக்கிறது. அதுவும் மாலை வேளைகளில் சொல்லவே தேவையில்லை. எங்கும் ஸ்ரீ ராம கிருஷ்ண மயம்!



கனகபவனத்திற்குள் எங்களால் ஒரு அடி கூட எடுத்துவைக்க முடியாத அளவிற்கு கூட்டம் நிரம்பி வழிந்தது. எப்படியோ பிரயத்தனப்பட்டு பிரதான மண்டபம் வரை உள்நுழைந்து விட்டோம். உள்ளே ஆயிரக்கணக்கான மக்கள் எள்விழ இடமில்லாமல் அமர்ந்து கொண்டும், நின்றுகொண்டும் இருந்தார்கள். மூச்சு விட முடியாமல் திணறித்தான் போனேன். கூடவந்த சினேகிதக் கூட்டம், அரவணைத்து அழைத்துச் சென்றுவிட்டார்கள். வெள்ளியினால் ஆன மைய மண்டபத்தில் ஸ்ரீ ராம பரிவார் மூர்த்தங்களை தரிசித்ததும் மிகவும் உணர்ச்சி வசப்பட்டுவிட்டேன். ஆரத்தி முடிந்துவிட்டபடியால் கூட்டம் கலைந்து, தரையில் சற்றேஉறுதியாக நிற்கும் இடம் கிடைத்தது. அந்த நொடியில் தான் தலை நிமிர்ந்து பவனத்தின் கலையழகினை ரசிக்க முடிந்தது. மனதைக் கொள்ளைகொள்ளும் அழகு என்று தான் என்னால் வர்ணிக்க முடிகிறது. ஆங்காங்கே தங்க நிறபூச்சு செய்து, இது ஒரு காலத்தில் சொர்ண மாளிகையாக இருந்தது என்பதை நமக்கு நினைவூட்டுவதாக இருந்தது.

ஸ்ரீராமரும் சீதையும் வாழ்ந்த இந்த மாளிகை,

திரேதா யுகத்திலேயே நலிவடைந்து போனதாகவும், துவாபர யுகத்தின் தொடக்கத்தில், ஸ்ரீ ராமரின் மகன் குஷ் சீரமைத்ததாகவும், பின்னர் ஸ்ரீ கிருஷ்ணரே புதுப்பித்தாகவும் கருதப்படுகிறது. பின்னர் தொடர்ந்து பல மன்னர்களால் புனரமைக்கப்பட்ட வரலாறும் உள்ளது. தற்போது அயோத்தி மக்களால் வழிபாட்டு ஸ்தலமாக கருதப்படும் கனக்பவனின் இருப்பிற்கு முக்கிய காரண கர்த்தர்கள் புந்தேல்கண்ட் மகாராஜா மகேந்திர பிரசாத்சிங் மற்றும் அவரது மனைவி மகாராணி விருஷ்பானு குன்வாரியும் ஆவார்கள் என்கிறது வரலாறு.

இந்த மைய மண்டபத்தில் தற்போது மூன்று ஜோடி ஸ்ரீ ராம சீதா மூர்த்தங்கள் இருக்கின்றன. இவற்றில் உயரமானதாக இருப்பது ராணி விருஷ்பானு குன்வாரி அவர்களாலும், சற்றேஉயரம் குறைவாக இருப்பது ராஜா விக்ரமாதித்தன் அவர்களாலும் ஸ்தாபிக்கப்பட்டது என்று சொல்கிறார்கள். மைய மண்டபத்தில் இருக்கும் மூன்றாவது ஜோடி ஸ்ரீ ராமர் சீதை விக்ரகங்களை, நாள் தவறாமல் ஸ்ரீ ராமர் சீதையை தரிசிக்க வரும் தனது பக்த பெண்மணிக்கு, ஸ்ரீ கிருஷ்ணரே அளித்த வரலாறும் இருக்கிறது. அதோடு மட்டுமல்ல, இந்த மூர்த்தங்களை அவள் ஆயுள் உள்ளவரை தரிசித்து, பின்னர் எடுத்து பத்திரப்படுத்தி வைக்கும்படி உத்தரவிட்டாராம் பகவான் கிருஷ்ணர். கலியுகத்தில் ஒரு மன்னன் இதனை மிகவும் பிரும்மாண்ட ஆலயமாக உருவாக்குவான் என்றும் சொல்லிச் சென்றாராம். அவர் கூற்றுப்படியே, முகலாயர்கள் காலத்தில் முற்றிலும் அழிக்கப்பட்டு, பின்னர் விக்ரமாதித்த மன்னரால் ஆலயம் எழுப்பப்படும் போது, இம்மூன்று ஜோடி

விக்ரகங்களும் பூமியிலிருந்து கண்டெடுக்கப்பட்டு புனர் ஸ்தாபிதம் செய்யப்பட்டது என்று கேட்டும் படித்தும் தெரிந்து கொண்டேன். மூன்று ஸ்ரீராம் சீதா மூர்த்தங்களையும் தரிசித்துவிட்டு வெளியே வரும்போது, நானே சற்றும் எதிர்பாராமல் கண்ணீர் பெருக்கிவிட்டேன். ஏன் கண்ணீர் சிந்துகிறேன் என்று எனக்கே புரியவில்லை. அயோத்தி ஸ்ரீ ராமர் தரிசனத்தை சற்றும் சதிர்பார்க்காத நேரத்தில் என்னைத் தன் சன்னதிக்கு அழைத்து வந்து தரிசிக்க வைத்த அந்த குழந்தை ராமரின் கருணையை நினைத்து நினைத்து உள்ளம் உருகி, என்னையும் அறியாமல் கண்ணீர் பெருக்கிவிட்டேன் என்றுதான் நினைக்கிறேன். ஆனால் பாவம், என்னை அழைத்து வந்தவர்கள், எனக்கு ஏதோ உடல் பிரச்சினை என்று நினைத்து, சற்று பயந்துதான் போனார்கள். என்னை உட்காரவைத்து தண்ணீர் கொடுத்து ஆசுவாசப்படுத்தினார்கள். கும்பாபிஷேகம் முடிந்து 48 நாட்களுக்குள் இப்படி ஒரு அற்புத தரிசனம் அவனுடைய கருணையினால் தானே! இந்த மன உருக்கத்துடன் ஸ்ரீராம் தர்பார் தரிசனத்திற்கு தயாரானோம்.

காத்திருங்கள்....


99940 89133  99940 89140

SRI SASTHA CATERING



*We are Supplying Meals,*
*Tiffin & Marriage Sear*
*Variation in Order*



28, Senthuran Colony, 2nd Street, Muvarasempet, Madipakkam, Chennai - 91

## வேதபாரதி - ஊரப்பாக்கம் உபாகர்மா



*19.08.2024* அன்று நடைபெற்ற உபாகர்மா நிகழ்ச்சியில் *100*க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து வாராந்திர ஞாயிறு நடைபெறும் காயத்ரீ ஜபத்தினை தொடர்ந்து இன்று காலை ஸ்ரீ காயத்ரீ ஜபம், ஹோமம் மற்றும் சிறப்பு பூஜைகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றன. இதில் *7*க்கும் மேற்பட்ட பிரம்மச்சாரி குழந்தைகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். குறிப்பாக கடந்த மாதம் நமது அமைப்பின் சார்பில் சமஷ்டி உபநயனம் செய்து கொண்ட பிரம்மச்சாரி குழந்தைகளும் கலந்து கொண்டது மிகவும் சிறப்பு.

## பாராட்டுவிழா

*25.08.2024* அன்று சங்கர் (எ) மணி சங்கர் அவர்களுக்கு அவருடைய சமூக தொண்டை பாராட்டி தமிழ்நாடு பிரஸ் & மீடியா ஓர்க்ஸ் யூனியன் சார்பில் சேவைசெம்மல் என்று பட்டம் அளித்து நினைவு பரிசு வழங்கி பாராட்டினார்கள்.



# ஆசான்

சென்றமாத தொடர்ச்சி....

இதற்கு மேலும் திருமூலர் திருமந்திரத்தில், குருவை அமைத்துக்கொள்வது பற்றி

"குருட்டினை நீக்கங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வார்
குருடுங் குருடுங் குருட்டாட்டம் ஆடிக்
குருடுங் குருடுங் குழிவிழு மாறே"

உண்மை உணர்ச்சியில்லார் அகக்கண் குருடாகிய அறியாமையினை நீக்கும் மெய்க்குருவினைக் கைக்கொள்ளார். அறியாமையை அகற்றும் நெறியே தெரியாத பொய்க்குருவினை மெய் எனக் கொள்வர். அங்ஙனங் கொள்ளுவதால் வழிகாட்டத் தெரியாத குருடுங் குருடுங் கூடிக் குருட்டு ஆட்டம் கொண்டு குழியில் விழுவது போன்று அகக்கண் இல்லாத பொய்க் குருவினைக் கொண்டு கருங்குழியில் வீழ்வர். சற்றேகடினமாக மேலுள்ள வாக்கியம் இருந்தாலும், குருவின் மகத்துவத்தை இதை விட கூறஇயலாது.

நமது இதிகாசங்களிலும் குருவின் முக்கியத்துவமும், குருவால் ஏற்படும் மாற்றங்களும் ஏராளம். துரோணாச்சார்யார், பரசுராமர், வசிஷ்டர், விஸ்வாமித்ரர் என அடுக்கி கொண்டே போகலாம்.

மகாபாரதப் போரில் கிருஷ்ணனே அர்ஜுனனுக்கு ஆசானாக அமைந்தான். முருகன் அப்பனுக்கே ஆசானான கதையும் நமக்கு தெரியும்.

பொதுவாக ஆசிரியர்கள் மாணவர்களை குறிப்பிடும் பொழுது "என் பிள்ளைகள்" என உளமாற உரிமை எடுத்துக்கொண்டு வழிகாட்டுவது என்பது மிக

ஆத்மார்த்தமானது. அம்பேத்கருக்கும், அப்துல் கலாமிற்கும், ஏன் பாரதியாருக்கு கூட குருவின் அன்பும், வழிகாட்டுதலும் அருமையாக அமைந்திருக்கிறது.

ராகுல் டிராவிட் அடைந்த வெற்றி, ஒரு ஆசிரியருக்கு கிடைத்த வெற்றி. அதே போல நல்ல ஆசிரியரை தக்கவைத்து கொண்ட ரோஹித் சர்மா என்ற நல்ல மாணவனின் வெற்றி. நல்ல ஆசானும், அதற்கேற்ற நல்ல மாணவனும் அமைந்தது பாரதத்தின் வெற்றி.

முற்றும்.

**வெ. சிவசங்கரி**

## வேதபாரதி - திருச்சி சிறப்பு சொற்பொழிவு

ஆகஸ்ட் 9, 10 & 11 ஆகிய மூன்று நாட்கள் ஸ்ரீரங்கம், (R.N. Rao Memorial Hall) மிருத்திகா பிருந்தாவன் சந்நிதானத்தில் மாலை 6.15 முதல் 8.15 வரை **திருமிகு க்ருஷ்ண ஜகன்னாதன் ஜி** அவர்களது ஆன்மீக சொற்பொழிவு நிகழ்ச்சி சுமார் 40 அன்பர்கள் பங்கேற்க சிறப்பாக நடைபெற்றது. முதல் நாள் **வள்ளலாரும் சனாதன தர்மமும்**, 2வது நாள் **பாரதியாரின் சனாதனம்** மற்றும் மூன்றாம் நாள் **தர்மத்தின் குரல்** என்ற தலைப்பிலும் அனைவரையும் ஈர்க்கக்கூடிய வகையில் சிறப்பாக நடைபெற்றது. நிறைவு நாள் தர்மத்தின் குரல் நிகழ்ச்சிக்கு முன்பாக பங்கஜம் ரங்கராஜன் சங்கீதாலயம் குழுவினரின் நாம சங்கீர்த்தனம் நிகழ்வு சிறப்பாக அமைந்தது.

**குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் ஸ்லோக வகுப்புகள் ஆன்லைன் மூலமாக**
ஆசிரியர் : ஸ்ரீ முரளிதரன்,
ஸ்ரீமதி நீலா முரளி, மதுரை
தொடர்புக்கு : **9443489129**

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- Breast Pumps
- Blood Glucose Meters
- BP Meters
- Alpha Beds
- Adult Diapers
- Under Pads
- Wheel Chairs
- Physio Products
- Home Sleep Study
- Oxygen Concentrator
- CPAP / Bi Pap
- Pulse Oxymeters
- Nebuliser
- Morning Walker
- Weighing Scale
- Air Purifier




**முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.**

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

# ரிஷிகேஷ் கேம்ப் 2024

சென்றமாத தொடர்ச்சி...

ஜுன் 13ம் தேதி காலை 5.00 மணி முதல் 7.30 மணி வரை ரிஷிகேஷ் ஸ்ரீ தயானந்த ஆஸ்ரம வளாக சிவன் கோவிலில் வேதபாராயணம் செய்யப்பட்டது. அன்று அதிக பட்ச உறுப்பினர்கள் Rafitng சென்று தண்ணீர் விளையாட்டுகள் விளையாடி புத்துணர்சசி பெற்றார்கள். அருகில் உள்ள கோவில்களில் தரிசனம் செய்தார்கள். புனித கங்கையில் மாத்யானிக ஸ்நானம் செய்தார்கள். மாலை வேதபாரதி சார்பில் தனிப்பட்ட முறையில் வேதோக்தமாக கங்கா ஆரத்தி ஏற்பாடு செய்து வழிபட்டார்கள். யாத்திரை சென்ற அனைவருக்கும் கங்கை கரையில் கங்கா ஆரத்தி வைபவ நிகழ்ச்சி உணர்ச்சிபூர்வமாக இருந்தது.

14.06.2024 அன்று காலை இரண்டு பேருந்துகளில் புறப்பட்டு தேவப்பிரயாக் சென்றடைந்தோம். மதிய உணவு வேனில் எடுத்துக்கொண்டு சென்றோம். வாழ்க்கையில் கிடைத்தர்கரிய பாக்யம் நதிகள் சங்கமம் ஆகும் இடத்தில் தர்ப்பணம் செய்தோம். பல ஜன்மங்களில் செய்த புண்ணியம் தேவப்பிரயாகையில் பிதுர்களுக்கு தர்ப்பணம் கொடுப்பது. புனித நதியில் ஸ்நானம் செய்வது மதியம் அங்கு ஆகாரம் எடுத்துக் கொண்டு ரிஷிகேஷ் வந்து சேர்ந்தோம். இரவு 9.00 மணிக்கு எல்லோரும் சேர்ந்து 4 நாட்கள் நிகழ்வுகளில் நடந்த விஷயங்களை பகிர்ந்து கொண்டோம். நடந்த எல்லா ஏற்பாடுகளுக்கும் முக்ய காரணமாக இருந்த ஸ்ரீ ராமகிருஷ்ணன், ஸ்ரீ ரகுநாத் மாமா, இருவரின் உழைப்பு மிகவும் பாராட்டுக்குரியது.

மறுநாள் 15ம் தேதி காலை 4.00 மணி முதல் Food Packing வேலைகள் துவங்கி 6.30 மணிக்கு டெல்லிக்கு

பயணம் செய்தோம். டெல்லியிலிருந்து பயணம் செய்து மும்பை, பெங்களூர், சென்னைக்கு தனித்தனியாக விமானத்தில் வந்து சேர்ந்தோம். பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள் கருணையால் வேதபாரதி குழுவினர் புனித ரிஷிகேஷ் யாத்திரை நிறைவு பெற்றது.

முற்றும்.

ஆசிரியர்.

## "ஸ்ரத்தாஞ்சலி"



வேதபாரதியின் பஜனை பாகவதர் ஸ்ரீ சீனிவாசன் அவர்களின் தாயாரும், ஸ்ரீ P.K.சேஷ ஐயங்கார் அவர்களின் தர்மபத்தினியுமான "ஸ்ரீமதி. S.கமலா அவர்கள் *26.08.2024* திங்கட்கிழமை காலை *8.30* மணியளவில் ஆச்சார்யன் திருவடிகளை அடைந்தார்கள். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேதபாரதி பிரார்த்திக்கிறது.

**பிரார்த்தனைகளுடன் வேதபாரதி புதுவை.**

## "ஸ்ரத்தாஞ்சலி"



வேதபாரதி புரவலர் பெங்களூரு ஸ்ரீ சுரேஷ் கண்ணன் அவர்களின் தாயார் திருமதி. நாகாம்பாள் *14.07.2024* அன்று சிவலோக ப்ராப்தி அடைந்தார்கள். தாயை இழந்து நிற்கும் குடும்பத்ினருக்கு வேதபாரதியின் ஆழ்ந்த அனுதாபங்கள். அம்மாவின் ஆன்மா சாந்தியடைய ப்ரார்த்திக்கிறோம்.

**பிரார்த்தனைகளுடன் வேதபாரதி**

Hara Hara Shankara Hari Om Jaya Jaya Shankara

# JAI SHRI AARADHANA TOURS

(Since 2000)

Chennai 600064 | shriaaradhanatours@gmail.com.

Golden Karnataka Thalakauvery, And Keerthi Narayanar, Selva Narayanar Shiva samudram, Jog falls. Sri Acharya Ramunujar Than konda meni Thondanuru Mysore

* Thalkadu
* Somnathpur
* Shivansamudra water falls,
* Thondanoru kere
* Melkote
* Nimishambika
* Chammundi hills
  *Baga mandala,
* ThalaKauvery Holi dip
* Jog falls
* Bhadra dam
* Bhadhra wildlife sanctuary

**Shimoga to sirsi in side the river - Sahasra lingam Darshan.**

* Marikamba temple
* Barude falls
* Lake
* Sirsi
* Murdeshwar enroute Hunavar
  Gokarna, Mysore

* 9 Nights 10 days

**Per person Rs. 36,850/-**

**Cost Including :-**
Ac Super Delux vehicle
*Mountain Terrain Ac wont function
Morning Coffee, Breakfast.
Double Room Ac. Accomodations.

**Cost Does not Include :-**
Train, Air fare, Noon lunch, Dinner, Boating, All monument entry,
Local Vehicle Share auto Charges from our main vehicle parking.
All Hotel Room boys, Servers Tips,
Last day Driver Tips,
Personal puja rituals expenses.

**Tour starts from : 17.12.2024 - 26.12.2024**

Note:- We don't entertain women to travel alone.

**S. Sundaresan** 98406 51441

**S.Anandan** 99411 33505

*ஸ்ரீ குருப்யோ நம:*
*ஸ்ரீ மாத்ருப்யோ நம:*
*ஓம் நமோ பகவத்யை ஸச்சிதாநந்த ரூபிண்யை ஸ்வாத்மை பரதேவதா லலிதா*



# ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம கோடி அர்ச்சனை வைபவம் 2025

*சிவ: ஸக்த்யா யுக்தோ யதி பவதி சக்த: ப்ரபவிதும்*
*ந சேதேவம் தேவோ ந கலு குஸர: ஸபந்திதுமபி*
*அதஸ்-த்வா மாராத்யாம் ஹரி ஹர விரிஞ்சாதிபி-ரபி*
*ப்ரணந்தும் ஸ்தோதும் வா கதமக்ருத புண்ய: ப்ரபவதி*
*ஸௌந்தர்யலஹரி – ஆதிசங்கர்*

*பராசக்தியான லோகமாதா ஸ்ரீ அம்பாளின் திருவருளால்தான் ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன், ஸதாசிவன், அஷ்டதிக்பாலகர்கள் முதலான சகல ஜீவராசிகளும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அனுக்ரஹித்தல் போன்ற சுபகார்யங்கள் செயல்படுகின்றன. பலரும் சுகமாய் இருக்கவே விரும்புகிறார்கள். அதற்கு "கிம் கரணீயம்" என்ன செய்ய வேண்டும் எனில் "சரணயுகளம் அம்பாயா". ஸ்ரீ அம்பாளின் பாதகமலங்களை பிடித்து சரணடைவதே சிறந்த வழி. இஹத்திலும் பரத்திலும் சுகமும் மோக்ஷமும் அளிக்கக்கூடிய பரதேவதையான அம்பாளுக்கு பகவத் க்ருபையை முன்னிட்டும் ஸ்ரீ ஆச்சார்யாள் அனுக்கிரஹத்துடனும் 2001, 2013ஐ தொடர்ந்து மூன்றாவது முறையாக ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம கோடி அர்ச்சனையை லோக க்ஷேமார்த்தமாக நிகழும் குரோதி வருஷம் தை மாதம் 6ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை (19.01.2025) முதல் தொடர்ச்சியாக காலை 8.45 முதல் 10.30 மணி வரை நடக்க இருக்கிற யஇந்த அர்ச்சனை வைபவத்தில் சுவாசினிகளும் ஆன்மீக அன்பர்கள் பலரும் பங்கு பெற்று இயன்றஅளவு பொருளுதவி பண உதவிகளை செய்து எல்லாம் வல்ல அம்பாளின் அனுகிரஹத்திற்கு பாத்திரர்கள் ஆகும்படி அன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.*

**இடம் : ஸ்ரீ தேவி கருமாரி த்ரிபுரசுந்தரி ஆலயம்**
*சாமியார் தோட்டத் தெரு, அசோக்நகர், சென்னை – 83*

**ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம மண்டலி**
மேற்கு மாம்பலம்
சென்னை – 600033.
போன் : **9445073431 / 99406 78902**

## THE QUEST ACADEMY

(An initiative by IIT-Madras Alumni)
Door No.4, 3rd Street, Balamurugan Nagar
Velachery, Chennai - 600 042

# CBSE TUITION

Class IX & X - Maths & Science
Class XI & XII - Maths, Physics, Chemistry, Biology & Computer Science
Coaching for JEE / NEET(UG) / Olympiad

Classes taken by IITians
Individual attention
Affordable fees
Frequent practice tests



Admissions open for 2024-25

Contact : Dr. B. Janarthanan B.E., M.Tech.(IITM), Ph.D(IITM)
**87545 57435 / 75985 25295**



ஹரி ஓம்
ஸ்ரீ குருப்யோ நம:

# வேதபாரதி

**யோகா வகுப்புகள்** (30 நிமிடங்கள்)

**வாரம் 2 நாட்கள் by Online**

**செவ்வாய், வியாழன் – காலை 6.00 மணி**
**சனி, ஞாயிறு – காலை 6.00 மணி**

ஆசிரியர் : யோகாச்சாரியார் **ஸ்ரீ J. சந்திரசேகர் ஜி**
திருச்சி

யோகாவில் இணைவோம் உடல் மனம் புத்துணர்ச்சி பெறுவோம்

தொடர்புக்கு :
**9443495950 / 9443453053**




**குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும்**
**ஸ்லோக வகுப்புகள் ஆன்லைன் மூலமாக**

ஆசிரியர் : ஸ்ரீ முரளிதரன்,
ஸ்ரீமதி நீலா முரளி, மதுரை
தொடர்புக்கு : **9443489129**


உ
திருமண பொருத்தம் இலவசம்
(அனைத்து சமூகத்தினருக்கும்)
வாட்ஸ்அப் மூலம் மட்டும்
பையன்கள் பெண்கள்
ஜாதக நகல்களை
வாட்ஸ் அப்பில்
அனுப்புதல் வேண்டும்.
தேதியூர். V.J. ராமன்
ஆத்மார்த்த ஜோதிடர்
9003195599
9445230940

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

Communication Address : S. SREEDHAR, 32, Ground Floor, Raja Nagar, 1st Main Road, Neelangarai, Chennai - 600 115.
Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071
Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org



## ஸ்ரீ காஞ்சி
## மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்

இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

என்பது சாஸ்த்ர வசனம்


பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்
2. கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.
3. நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.
4. மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**


CUB
CITY UNION BANK
City Union Bank introduces
" Voice Biometric Authentication"
in CUB All in One Mobile Banking App
in Association with
KAIZEN VOIZ
simple-seamless-secure
IDRBT
Explore, Enable, Excel
VOICE
BIOMETRIC
"Your voice is your password"

RNI No. : TNTAM/2016/73726 REGD No. : TN/CC(S)DN/571/24-26 

Date of Publication First Week of Every Month
Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/24-26
Posted at Patrika Chennai, Egmore.
Posted between 1 - 7th September 2024



வாழ்க்கையில் எத்துனை துன்பங்களை கடந்த போதிலும்
அதிலிருந்து மீள்வதற்கும், நம்பிக்கை பெறுவதற்கும்
இருப்பது மழலையின் சிரித்த முகம் ஒன்றே...

தரமான நகைகளுக்கு
சரியான முகவரி....

சூர்யா ஜுவல்லர்ஸ்®

287, 288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன் : 0421 2241829
97862 41829 www.suryajewellers.co.in

To

____________________

____________________

____________________

____________________

If not delivered please return to
**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.